1966-67-ம்

ஆண்டு நிதி நிலை அறிக்கை

முதல் அமைச்சர்

திரு எம். பக்தவத்சலம்

அவர்கள் ஆற்றிய உரை

26—2—1966

1966-67-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கை

1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ம் தேதி தமிழ்நாடு சட்ட சபையில் முதல் அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் ஆற்றிய உரை.

கனம் சபாநாயகர் அவர்களே,

தோற்றுவாய்.

1966–67-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இம் மன்றத்தின் முன்பு சமர்ப்பிக்கின்றேன். இத்துடன் 1964–65-ம் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்கின் விவரங்களும், நடப்பு ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளும் மன்றத்தின் பார்வைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகள், மூன்றாவது திட்டத்தை நிறைவேற்றுவதில், நாம் மேற்கொண்ட முயற்சிகளின் சிகரமாக விளங்குகின்றன. அவ்வாறே அடுத்த ஆண்டின் நிதி நிலை அறிக்கை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வருகையை முன்னுரைப்பதுபோல் அமைந்துள்ளன. இந் நிதி நிலை அறிக்கை, அண்மையில் நமது பொருளாதாரத்தில் ஏற்பட்ட தவிர்க்க முடியாத சில விளைவுகளையொட்டி நமது வேலைத் திட்டங்களின் வைப்பு முறை வரிசையை (Order of priority) ஓரளவுக்கு மாற்றி அமைக்க நேர்ந்துள்ளதை எதிரொளிக்கும் முறையிலே அமைந்துள்ளதைக் காணலாம். மூன்றாம் திட்டத்தின் சாதனை, நிதி அளவில் கணிசமாக மேம்பட்டிருப்பதுடன் சிறுபாசனம், மின்சாரம், பொதுக் கல்வி, தொழில் நுட்பக்கல்வி, சாலைகள் போன்ற பல வளர்ச்சித் தலைப்புகளின்கீழ், தொடக்கத்தில் நாம் குறிப்பிட்டிருந்த

அளவுக்கும் மேலாகவே உள்ளதை ஏற்கெனவே இம் மன்றம் அறிந்துள்ளது. இவ்வுண்மையை, இவ்வாண்டின் திருத்த மதிப்பீடுகள் உறுதிப்படுத்துவனவாக அமைந் துள்ளன. இப்போது மூன்றும் திட்டத்திற்கு நாம் செய்துள்ள முதலீடு 341 கோடி ரூபாய்க்கும் அதிகமாகும். திட்டத் தொடக்கத்தில் நாம் எண்ணிய தொகையாகிய 291 கோடி ரூபாயைவிட இது பதினேழு சத விகிதம் அதிகமாகும். திட்ட முதலீட்டில் ஏற்பட்டுள்ள இந்த அதிகரிப்பு இதற்கு முன் இம் மன்றத்தில் நான் பன்முறை சுட்டிக்காட்டியதைப்போன்று, விலைவாசிகளின் ஏற்றம் ஒன்றினுல் மட்டும் ஏற்பட்டதன்று. விலைவாசிகளின் ஏற்றத்திலுைம் வேலைத் திட்ட விவரங்களில் ஏற்பட்ட மாறுதல்களினுலும், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம், குந்தா நீர்-மின்சாரத் திட்டம் போன்ற சில பெருந் திட்டங்களுக்கான செலவு ஓரளவு உயர்ந்துள்ளது உண்மையே. எனினும், கிணறு தோண்டல், பொதுக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி போன்ற முக்கியமான சில திட்டங்களின்கீழ் முதலில் நிச்சயித்த குறிக்கோள்களை மேலும் உயர்த்தியதாலும் திட்டப் பணிகள், நிறைவேறி வருகையில், கோதையாறு நீர் மின்சாரத் திட்டம், மேட்டூர் சுரங்கத் திட்டத்தின் இரண்டாம் நிலை போன்ற சில புதிய திட்டங்களைச் சேர்த்ததாலுமே திட்ட முதலீடு மிகவும் உயர்ந்துள்ளது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இத் திட்ட முதலீ டான 341 கோடி ரூபாயில், வேளாண்மைத் துறையிலும் அத்துடன் தொடர்புள்ள ஏனைய துறை களிலும் மேற்கொண்ட விரைவுத் திட்டங்கள் (Crash Programme) என்று தொகுத்துச் சொல்லப்படுகின்ற பணிகளுக்காக செலவான 3·88 கோடி ரூபாய் சேரவில்லை யென்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். திட்டம் என்பது இடையீடற்ற தொடர்ச்சியான ஒரு நிகழ்ச்சியாதலின், எண்ணூர் அனல் மின்நிலையம் போன்ற நான்காம் திட்டத்தின் சில முக்கியமான திட்டங்கள் குறித்து, நாம் முன்கூட்டிய நடவடிக்கை களையும் மேற்கொண்டுள்ளோம். மத்திய அரசிட மிருந்து தனியொரு ஏற்பாட்டின்கீழ் நிதி உதவி பெற்று

செயல்படுத்தப்படுகின்ற இத்தகைய முன் நடவடிக்கைத் திட்டங்களுக்குரிய மொத்த முதலீடு 1·46 கோடி ரூபாயும் மூன்ரும் திட்ட முதலீடான 341 கோடி ரூபாயில் சேர்க்கப்படவில்லை. இவற்றையும் கணக்கில் எடுத்துக்கொள்வோமாளுல், வளர்ச்சித் திட்டங்களுக்கென நாம் முதலீடு செய்துள்ள தொகை சுமார் 347 கோடி ரூபாய் ஆகும். இம் மாநிலத்தின் பொருளாதார உயர்விற்காக நடப்புத் திட்டக் காலத்தில், நாம் மேற்கொண்டுள்ள மாபெரும் முயற்சிக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

2. முதல் ஐந்தாண்டுத் திட்டம் முழுவதற்குமாக மாநிலத் திட்டத்தின் மொத்த முதலீட்டுத் தொகை 80 கோடி ரூபாய்தான். இது, நடப்பு ஆண்டில் மட்டும் நாம் நிறைவேற்ற எண்ணிய திட்ட முதலீட்டைவிட சற்றே குறைவானது என்பதையும் இரண்டாம் திட்டத்தில் நாம் முதலீடு செய்த இறுதித் தொகை 186 கோடி ரூபாய் அளவிலேயே இருந்ததென்பதையும் நினைவுகூரும்போது, மூன்ரும் திட்டக் கால அளவில் நமது சாதனைகள் எவ்வளவு மகத்தானவை என்பதும், நமது மாநிலத்தின் நிதி ஆதார அடிப்படை, எந்த அளவுக்கு இதற்கிடையே செழித்து வலுவடைந்துள்ளது என்பதும் தெளிவாக விளங்கும். நமது நாட்டின் பொருளாதாரத்தை தற்போது எதிர்நோக்கியுள்ள இடையூறுகளைப் பெருமளவில் எடுத்துக்காட்டுவது பொருத்தமே. இச் சிக்கல்களைக் குறித்துச் சிந்தனையில் ஆழ்வதும் நியாயமே. ஆளுல், இதுவரையில் நாம் ஆற்றியுள்ள சாதனைகளை நினைவுகூரும்போது, வருங்காலம் வளமுடையதாயிருக்குமென நம்புவதற்கு ஏற்ற காரணங்கள் உள்ளன.

3. வேளாண்மை உற்பத்தியின் மந்தமான வளர்ச்சி, பருவநிலை காரணமாக மேலும் பாதிக்கப்பட்டதும் முன்னர்ச் செய்த முதலீடுகளிலிருந்து முழுப்பலனையும் பெறுவதற்கு ஆகும் கால நீட்சியும், இந்தியப் பொருளாதாரம் குறிப்பிட்டவண்ணம் வளர்ச்சி பெருமல் தடைப்படுவதற்குரிய இரண்டு முக்கிய

காரணங்களாகும். நான்காம் திட்டத்தில் அடங்கிய மிக விரிவான ஆக்கப்பணிகளை நிறைவேற்றவும், அவற்றிற்கு அடிப்படையான நம் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் வளர்ச்சியினைத் தடைப்படுத்தி நிற்கும் இவ் விடர்ப்பாடுகளைக் களைவதில் நாம் வெற்றி காண வேண்டும். எனவே, குறைந்த காலத்தில் பலன் தரும் வேளாண்மைத் திட்டங்களையும், முடிவுபெருத ஏனைய பிற திட்டங்களையும் விரைந்து செயல்படுத்துவதிலும், வரும் ஆண்டில் கவனம் செலுத்தி, அத் திட்டங்களால் கிட்டுமென எண்ணிய நன்மைகளை மிக விரைவில் பெற முயல வேண்டும். வெளிநாட்டு உதவி கிட்டுவதில் நிலவிவரும் உறுதியற்ற நிலைமை இன்னும் முற்றிலும் தெளிவடையவில்லையாதலால், நாடு முழுவதற்குமான நான்காம் திட்டத்தை முடிவு செய்வதில் இயல்பாகவே சிறிது காலதாமதம் ஏற்பட்டு விட்டது. இதனுல் மாநிலத் திட்டத்தின் வண்ணத்தையும், அதற்கான மத்திய அரசின் உதவி அளவையும் வரையறை செய்வதிலும் சிறிது கால நீட்டம் ஏற்பட்டு விட்டது. எனவே, மாநில நான்காம் திட்டத்தின் வடிவ அமைப்பையும் அதன் உள்ளடங்கிய திட்டங்களையும் குறிப்பாக அந்நியச் செலாவணி புதிதாகத் தேவைப்படும் திட்ட வேலைகளையும் பற்றி ஒரு முடிவுக்கு வர இன்னும் கொஞ்ச காலம் ஆவது இயற்கையே. எனினும், மூன்ரும் திட்ட இறுதி ஆண்டில் எய்திய அளவைவிட அடுத்த ஆண்டு வளர்ச்சித் திட்ட வேலைகள் குறிப்பிடத்தக்க முறையில் உயர்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. திட்டப் பணிகளைத் தக்க வகையில் சீர்தூக்கிப் பார்க்கும்போது, புதிய ஆசிரியர்களை நியமிப்பது, புதிய மருத்துவமனைகளை அமைப்பது போன்ற திட்டங்களின் நிறைவேற்றத்திற்காக, ரெவின்யூக் கணக்கில் மூன்ருவது திட்டத்தின் இறுதியில் செய்த செலவினங்கள் இப்போது திட்டத்திற்குப் புறம்பான பொறுப்பேற்ற செலவினங்களாகவே (committed expenditure) கருதப்படும் என்பதையும் நாம் நினைவில் இருத்திக் கொள்வது நலம். இத்தகைய பொறுப்பேற்ற செலவினங்கள் 17 கோடி ரூபாய் அளவிற்கு இருக்குமெனக் கணக்கிடப்படுகிறது. இத் தொகையையும், அடுத்த ஆண்டுத் திட்டச் செலவான

75·38 கோடி ரூபாயுடன் சேர்த்து மதிப்பிட்டோமானால் வளர்ச்சித் திட்ட வேலைகளை விரிவாக்கும் வேகத்தில் சுணக்கம் ஏதும் இருக்காது என்பது தெளிவாகும்.

4. வேளாண்மை உற்பத்தியை மேலும் பெருக்கக் கூடிய திட்ட வேலைகள் நமது நாட்டத்தையும், நிதி வசதியையும் அடுத்த ஆண்டுத் திட்டத்தில் பெரும்பாலும் கவர்ந்திருப்பினும், நமது திட்டங்கள் பொருளாதார முன்னேற்றத்திற்கு எத்துணை முக்கியத்துவம் அளித்துள்ளனவோ, அத்துணை முக்கியத்துவம் சமுதாய வளர்ச்சிக்கும் அளித்துள்ளன என்பதை மறந்துவிடக் கூடாது. ஜனநாயக சோஷலிச சமுதாயத்தை நிறுவ வேண்டுமென்று அறிவிக்கப்பட்ட நமது கோட்பாட்டிற்கிணங்க, நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் சமவாய்ப்பு அளிக்க உதவும் வேலைத் திட்டங்களை நாம் வலியுறுத்தி வந்துள்ளோம். இதற்காக கல்வி, மருத்துவ வசதி, சமூகக் காப்பு போன்ற வசதிகளை மேன்மேலும் பரவலாக மக்கள் பெறுவதற்கு வகைசெய்யும் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கம் செய்வது அவசியமாகிறது. எனவே, வேளாண்மைத் துறையிலும் தொழில் துறையிலும் உற்பத்தியைப் பெருக்குவதிலேயே நமது வசதிகளைப் பெரும்பாலும் பயன்படுத்த வேண்டிய இன்றைய சூழ்நிலையிலும், கல்வி, மருத்துவ உதவி போன்ற சமூகப் பணிகளின் வளர்ச்சி வேகம் எவ்வகையிலும் தடைப்படா வண்ணம், வேண்டிய திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த வழிவகை செய்துள்ளோம்.

5. இவ்வாறு எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி வேகம் சிறிதும் குறையாமல் பார்த்துக்கொள்ளும் வேளையில், அடிப்படைப் பொருள்களின் விலைவாசிகளைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்காக நேரடிக் கட்டுப்பாட்டின் மூலம் பொருள்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் அவசியத்தையும் நாம் புறக்கணிக்கவில்லை. உற்பத்தியாளர்களுக்கு இன்னல்கள் ஏதுவும் இன்றி உணவு தானியங்களைக் கொள்முதல் செய்யும் திட்டத்தை நாம் வெற்றிகரமாய்ச் செய விலைவாசி உயர்வு.

லாற்றியதன் பயனாய், விலைவாசி ஏற்றத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி, பொதுவாக நகர்ப்புற மக்களுக்கும் குறிப்பாக நிலையான வருவாயுடையவர்களுக்கும் சற்று ஆதரவு அளித்துள்ளோம். 1965–66-ம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளிலும் அடுத்த ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்திலும் அரசாங்கக் கணக்கில் உணவு தானியக் கொள்முதல் செய்வதற்காகப் பெருமளவில் தொகை ஒதுக்கப்பட்டிருப்பது, நமது மக்களில், எளிதில் பாதிக்கக்கூடிய பகுதியினருக்கு இன்றியமையாத உணவுப் பொருள்களை நியாய விலைகளில் கிடைக்கச் செய்வதில் அரசாங்கத்திற்குள்ள அக்கறையையும் உறுதியையும் நன்கு எடுத்துக்காட்டுவதாக உள்ளது. அரசாங்கச் செலவினங்களில் சிக்கன முறைகளைக் கண்டிப்புடன் கடைப்பிடிக்க வேண்டுமென்பதிலும், பணச் செலாவணி மேலும் பெருகாத வகையில் அரசாங்க நிதிக்கூறுகளை நிர்வகிக்க வேண்டுமென்பதிலும் அரசாங்கம் கண்ணும் கருத்துமாக உள்ளது. இதற்கிணங்கவே, ரெவின்யூக் கணக்கில் சொற்ப உபரி எழும் வகையில் இந் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த உபரித் தொகையை உயர்த்தும் நோக்கத்துடன் சில சிக்கன ஏற்பாடுகளைக் கையாளவும் முற்பட்டுள்ளோம். எனவே, சிக்கனத்தோடு இணைந்த முன்னேற்றமே, அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் சிறப்பான குறிக்கோள் என்றால் மிகையாகாது.

வேளாண்மை வளர்ச்சி.

6. வேளாண்மைத் துறையில் பெரிதும் வளர்ச்சி அடைய வேண்டுமென்பதே நமது தலையாய குறிக்கோளாக இருக்க வேண்டும். அடுத்த ஆண்டில் இத்துறையில் நமக்குக் கிட்டும் சாதனைகளே, நான்காம் திட்டத்தின் போக்கை நிர்ணயிப்பதற்கு அடிப்படையாக அமையும். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமே, மக்களது நுகர்வுத் தரத்தினை மேம்படுத்தவும், விலைவாசிகளை கட்டுக்குள் வைத்திருக்கவும் முடியும். நான்காம் திட்டத்தில் உள்ள அந்நியச் செலாவணிப் பற்றுக் குறையை நிறைவு செய்யும் வகையில் ஏற்றுமதியின் அளவு உயர்ந்தால்தான் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறும்.

இது மீண்டும் விலைவாசிகளையும், செலவினங்களையும் கட்டுப்படுத்துவதன் மூலம், நம் தொழிற்பண்டங்கள், அந்நியச் சந்தைகளில் போட்டியிடத் தக்க நிலையை அடைவதைப் பொறுத்தேயுள்ளது. ஆகவே, அடுத்த ஆண்டுத் திட்டம், குறைந்தது நாலரை லட்சம் டன் அளவிற்கு உணவு தானிய உற்பத்தித் திறனைக் கூட்டுவதற்கு வேண்டிய வளங்களும் வசதிகளும் அமைய வகை செய்கிறது. நடப்புத் திட்டக் கால அளவில் நாம் நிறைவேற்றியுள்ள திட்ட வேலைகளையும் செய்துள்ள முதலீடுகளையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, நமது குறிக்கோளாகிய 16·50 லட்சம் டன் அளவிற்கு மாறாக, 13·30 லட்சம் டன் அளவிற்கே கூடுதல் உற்பத்தித் திறனை நாம் உருவாக்கியிருக்கிறோம் என்பது தெரிய வரும். பெரும்பாலும் இரசாயன உர வகைகளைப் பயன்படுத்துவதில்தான் இக் குறைபாடு நிகழ்ந்திருக்கிறது. நடப்பு ஆண்டில் திட்டக் குறிக்கோளான 5·80 லட்சம் டன் அம்மோனியம் சல்பேட் உரத்துக்கு மாறாக 3·20 லட்சம் டன் அளவே கிட்டியுள்ளது. பெரும்பாலும் மூன்றும் திட்டக் காலம் நெடுக இவ்வுர வகைப் பற்றாக்குறை நம்மிடையே இருந்து வருகிறது. பருவத்தின் கோளாறுகள் ஒருபுறமிருக்க, வேளாண்மை உற்பத்தித் துறையில் நாம் எதிர்பார்த்த அளவிற்கு விளைச்சல் கிட்டாததற்கு இவ்வுரப் பற்றாக்குறையைத் தான் பெருங்காரணமாய்க் கூற வேண்டும். விளைச்சல் அளவை நிர்ணயிப்பதில் பருவமழையின் பங்கு இன்னமும் அதிகமாகவே உள்ளது. கடந்த சில ஆண்டுகளின் வேளாண்மை உற்பத்திப் புள்ளி விவரங்களை ஆராயுமிடத்து, தமிழ்நாடு போன்ற ஒரு மாநிலத்தில் வானம் நன்கு வாய்த்த ஒரு பருவத்திலும், அது பெரிதும் பொய்த்த ஒரு காலத்திலும் வேளாண்மை உற்பத்தியில் ஏற்படும் வேறுபாடு பத்து லட்சம் டன் அளவில் இருக்கலாம் எனத் தெரியவருகிறது. நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த நல்ல மழையால் பயிர் நிலையில் எதிர்பார்த்ததைவிட முன்னேற்றம் காணப்பட்டாலும், நடப்பு ஆண்டில் குறிப்பாக மழைவளம் சுருங்கியதைப் பற்றி மன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். நமது அணைகளில் தேங்கிநின்ற குறைந்த அளவு நீரை

நல்வகையில் பயன்படுத்தியதால், பெரும் பாசனப் பகுதிகளில் உள்ள முக்கிய பயிர்கள் வாடாத வண்ணம் காக்க முடிந்தது. ஆனால், இதன் காரணமாக, கீழ் பவானி போன்ற சில திட்டங்களின் கீழுள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நாம் தண்ணீர்விட முடியாமற் போய்விட்டது. மற்றும், சில பகுதிகளில் பட்டம் தவறிய விதைப்பாலும், நடவாலும் விளைச்சல், குறையக் கூடும்; குறிப்பாகக் காவிரி சங்கமுகப் பகுதியில் தாளடிப் பயிரின் விளைச்சல் குறைவாகவிருக்கும். நடப்பு ஆண்டிற்கேயுரிய நீடிய இவ் வறட்சி நிலையால், திட்ட வேலைகள் வகையிலும், முதலீடுகள் வகையிலும் தோற்றுவிக்கப்பட்ட உற்பத்தித் திறனளவிற்குக் குறைவாகவே, விளைவு குறைந்து போகும் வாய்ப்பு இயல்பாகவே உள்ளது. பருவமழை குன்றியதால் விளைச்சலில் எழக்கூடிய திரிபினை விடுத்து, நடப்புத் திட்டக் காலத்தில் உருவாக்கப்பட்ட உற்பத்தித் திறனின் அடிப்படையிலேயே அடுத்த ஆண்டுக்காக நாம் வகை செய்யக் கருதியுள்ள வசதிகளையும் முதலீடுகளையும் குறித்துத் திட்டம் வகுக்க வேண்டும்.

நவரை இயக்கம்

7. டிசம்பர் மாதம் பெய்த நல்ல மழையால், ஜனவரி மாதத்திற்கும், மே மாதத்திற்கும் இடையே சாகுபடி செய்யக்கூடிய பகுதிகளில் உள்ள ஏரிகளும் கிணறுகளும் நிரம்பி உள்ளன. நல்ல ரக விதைகளையும், உர வகைகளையும், பயிர்ப் பாதுகாப்பு இரசாயனப் பொருள்களையும் முதலிடங் கொடுத்து வழங்கி, சிறப்பான நவரை இயக்கம் ஒன்றை நடத்துவதன் மூலம், இந்த நவரைப் பருவத்தில் உற்பத்தியை முனைந்து பெருக்குவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. இங்ஙனம், சுமார் இரண்டரை லட்சம் ஏக்கர் பரப்பில் சாகுபடியாகும் நவரைப் பயிரின் சராசரி விளைவை உயர்த்துவதன் மூலம் மற்ற இடங்களில் ஏற்பட்ட விளைச்சல் குறைவை ஓரளவிற்கு ஈடு செய்யலாமென்று எதிர்பார்க்கிறோம். அடுத்த ஆண்டுத் திட்டத்தில் பொய்யாத பாசன வசதியுள்ள சில பகுதிகளில், அதிக விளைச்சல் தரும் நெல், புன்செய்த் தானிய ரகங்களைப் பரவலாக்குதல், நைட்ரஜன்-பாஸ்பர உர வகைகளை அவற்றின் இயல்பறிந்து கலந்து சீராக உபயோகிக்கும் பழக்கத்தை

மேலும் அதிகப்படுத்தல், புதிய கிணறுகளைத் தோண்டல், உள்ள கிணறுகளுக்கு மின்சார வசதி அளித்தல் போன்ற வழிகளில் இறைவைப் பாசனத் திட்டங்களை ஊக்கத்தோடு நிறைவேற்றல் ஆகிய ஆக்கப்பணிகள் சிறப்பிடம் பெறும்.

அரசாங்க விதைப் பண்ணைகள்.

8. நடப்புத் திட்டக் காலத்தில் நிர்ணயித்தபடியே விதைப் பண்ணைகளை நிறுவி முடித்து விடுவோம். விதைப் பண்ணைகளை அடங்கல் முறையில் (Comprehensive manner) வளர்ப்பது குறித்த திட்ட வரைவுகள் தயாரிக்கப்பட்டு அவை படிப்படியாக நிறைவேற்றப் பட்டு வருகின்றன. ஆதாய விரயக் கணக்கை வைத்து மட்டும் இப் பண்ணைகளின் பணியை நிச்சயித்துவிட முடியாதென்றாலும், 1964–65-ல் 52 பண்ணைகள் லாபத்துடனும் 22 பண்ணைகள் மட்டுமே நஷ்டத்திலும் செயல் பட்டன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இவை யனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துக் கணக்கிடும்போது 1 லட்சத்து 14 ஆயிரம் ரூபாய் லாபம் கிட்டியுள்ளது. விதைப்பண்ணைகளின் வளர்ச்சிக்கான திட்ட வரைவுகளைச் செயல்படுத்தியதும், இப் பண்ணைகளை வெற்றிகரமாக நடத்த இயலாமற் செய்யும் பாசனவசதிக் குறைவுகள், செழிப்பற்ற மண் வளம் போன்ற இயல்பான தடைகள் அகற்றப்பட்டு இப் பண்ணைகளின் நிதி நிலை மேலும் சீர்ப்படுமென நினைக்கிறோம். விதைப் பெருக்குத் திட்டத்தைப் பொறுத்தவரையில், தஞ்சாவூர் சங்கமுகப் பகுதியில் கடந்த குறுவைப் பருவத்தில், ஐந்தாயிரம் ஏக்கர் பரப்பளவுக்கு, மிகுதியாக விளைச்சலைத் தரும் ஜப்பான்-இந்தியக் கலப்பினமான ADT. 27 என்கிற நெல் ரகத்தைப் பயிரிட்டது, மன நிறைவளிக்கக் கூடிய ஓர் அரிய சாதனையாகும். இதற்குமுன் ஏக்கர் ஒன்றிற்குக் கிட்டிய வழக்கமான குறுவை விளைச்சல் 2,400 ராத்தல்தான். ஆனால் அதற்கு மாறாக, ஐந்தாயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட இக் கலப்பு நெல் ரகத்தின் மூலம் ஏக்கர் ஒன்றுக்குச் சராசரி 3,840 ராத்தல் விளைச்சல் கிடைத்துள்ளது. இந்த ஆண்டில் சுமார் 5,000 டன் அளவிற்கு இந்த ரக விதை நெல், கொள்முதல், செய்யப் பட்டுள்ளது. இதைக் கொண்டு தஞ்சையில் அடுத்த

குறுவைப் பருவத்தில் இரண்டு லட்சம் ஏக்கராவிலும், மற்ற மாவட்டங்களில் ஏறக்குறைய அறுபதாயிரம் ஏக்கராவிலும் பயிரிடக் கருதியுள்ளோம். பருவநிலை இயல்பாக உள்ள காலங்களில் சராசரி விளைச்சல் ஏக்கராவிற்கு 3,500 ராத்தலுக்குக் குறையாது என்றும், அரிசி உற்பத்திக்கு, இது பெருமளவு உதவுமென்றும் மதிப்பிடப்படுகிறது. மற்றும் கலப்பின வளர்ப்பு நெல் (Culture) ரகங்கள் இரண்டு இப்போது கழனிகளில் பயிரிடப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் கலப்பின வளர்ப்பு நெல் 2701-ம், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் கலப்பின வளர்ப்பு நெல் 2410-ம் பயிரிடப்பட்டு நல்ல விளைச்சல் தருமென எதிர்பார்க்கப் படுகிறது. ஏக்கராவிற்கு மூன்று டன்னுக்கு மேலாகவே விளைச்சல் தருமென்று சொல்லப்படுகிற தெய்ச்சுங் நேடிவ்-1 (Taichung Native-1) என்கிற புதிய ரக நெல்லை, நவரைப் பருவத்தில் பயிரிட்டுப் பரிசீலனை செய்யவும் நினைத்திருக்கிறோம். 1966 ஜூலைக்குள் இப்பரிசீலனைகளின் முடிவுகள் தெரிந்துவிடும். கூறப்படும் அளவுக்கு விளைச்சல் கிட்டுமென இதன் மூலம் தெரிந்தால், 1966–67-லேயே குறிப்பிடத்தக்க அளவு நிலப் பரப்பில் இந்த நெல் ரகம் பயிரிடப்படும். இதைப் போன்ற மற்றும் வேறு புதிய இரு நெல் ரகங்களான தெய்ச்சுங்கு-65 (Taichung-65) தெய்னன்-3 (Tainan-3) என்பவையும் நமது மாநிலத்தில் பெருமளவில் பயிரிடப்படுவதற்கு ஏற்றனவா என்பதை நிச்சயிப்பதற்காகப் பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புன்செய்த் தானியங்கள்.

9. புன்செய்த் தானியங்களும் நமது உணவுத் திட்டத்தைச் சமன் செய்ய, மிகவும் முக்கியமானவை. எனவே, புன்செய்த் தானிய விளைச்சலை அதிகரிப்பதில் நமது வேளாண்மைத் துறை வல்லுநர்கள் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றனர். பாசன வசதி பெற்ற நிலங்களில், அதிக அளவு இரசாயன உரங்களை ஏற்று

அதிக விளைச்சலை அளிக்கக்கூடிய C.S.H. 1 என்ற கலப்பு இனச் சோள ரகம் ஒன்று புழக்கத்திற்குக் கொண்டுவரப் பட்டது. அது ஏக்கர் ஒன்றுக்கு 5,200 ராத்தல் வரை விளைந்துள்ளது. நமது சிறந்த சோள ரகங்களின் மூலம் கிடைக்கும் விளைச்சலுக்கு மேல், இது அறுபது சத விகிதம் கூடுதலாகத் தருகிறது. நமது மாநிலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கலப்பு இனக் கம்பு ரகம் X.3-ம் பஞ்சாப் மாநிலத்தில் உருவான கலப்பு இனக் கம்பு ரகம் H.B. 1-ம் மிக ஊக்கமளிக்கும் முடிவுகளைத் தந்துள்ளன. குறிப்பாக H.B. 1-ரகம் ஏக்கராவிற்கு 4,800 ராத்தல் வரையில் விளைச்சல் தந்துள்ளது. C.S.H-1 ரகக் கம்பு 4,500 ஏக்கர் நிலங்களிலும், X-3, H.B. 1 ரகங்கள் 10,000 ஏக்கர் நிலங்களிலும் இக் கோடைப் பருவத்தில் பயிரிடப்படும். இக் கலப்பு இன ரகக் கம்பு விதைகளை அடுத்த ஆண்டு மேலும் அதிக அளவு நிலப் பரப்பில் பயிரிடுவதற்கேற்ற வகையில் உற்பத்தி செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

10. இரசாயன உர வகைகளைத் தட்டின்றி வழங்க உரம்.
வகை செய்தால்தான் இந்தப் புதிய ரக விதைகளின் முழுத் திறனளவையும் பெற முடியும். இரசாயன உரங்களை இறக்குமதி செய்வதற்கென்றே அண்மையில் அமெரிக்காவிடமிருந்து நாம் கடனுதவி பெற்றுள்ள தாலும், அத்தகைய இறக்குமதிகளுக்காக இந்திய அரசு தனது நிதி ஆதாரங்களிலிருந்து மேலும் அதிகமாய் அந்நியச் செலாவணி வசதியை ஒதுக்கித் தருவதாக ஒப்புக் கொண்டிருப்பதாலும், அடுத்த பருவத்தில் உர வகைகள் கணிசமான அளவில் கூடுதலாகக் கிட்டுமென எதிர்பார்க்கலாம். மாநில அரசாங்கம், கிடைக்கக்கூடிய உரவகைகளைச் செவ்வனே வழங்குவதற்கான ஏற்பாடுகள் குறித்து இடைவிடாது ஆராய்ந்து அவ்வப்போது ஆவன செய்யும். இரசாயன உர வகைகளை, உள்ளூர் உரங் களுடன் உரிய முறையிற் கலந்து பயன்படுத்தினால்

மிகச்சிறந்த பலன்கள் பெறலாம் என்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளது. எனவே, தழை உரங்களையும் உள்ளூர் உர வளங்களையும் பெருக்குவதற்கான திட்டங்கள் உற்சாகத்தோடு நிறைவேற்றப்பட வேண்டும். தழை உர விதை உற்பத்தியைப் பெருக்குவதற்காக, விதைப் பண்ணைகளையுடைய குடியானவர்களுக்கு வழங்கப்படும் மானியத் தொகையை குவின்டல் ஒன்றுக்கு 5 ரூபாயிலிருந்து 10 ரூபாயாக உயர்த்த நினைத்திருக்கிறோம். தழை உரங்களைப் பயிர் செய்வதற்காக 1966–67-ல் மேலும் 60 பஞ்சாயத்துக்களைத் தேர்ந்தெடுத்து, இதற்கென புதிய கிணறுகள் தோண்டுவதற்காகவும், விசை ஏற்றங்கள் (Pump-sets) நிறுவுவதற்காகவும், கடன்கள் வழங்கப்படும். நகரக் குப்பை எரு போன்ற உள்ளூர் உர வளங்களைப் பெருக்கும் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கம் 1966–67-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மதிப்பீடுகளில் ஏறக்குறைய 35 லட்சம் ரூபாய் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

சிறு பாசனத் திட்டங்கள்.

11. நடப்பு ஆண்டில் புதிய கிணறுகள் தோண்டும் வேலைத் திட்டங்கள் உட்பட சிறுபாசனத் திட்டங்களை நிறைவேற்றும் பணி மிகவும் விரைவுபடுத்தப்பட்டுள்ளது என்பதை இம் மன்றம் நன்கு அறியும். பற்பல சிறு பாசனத் திட்டங்களுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் முன்னர் நாம் வகை செய்திருந்த தொகை 405 லட்சம் ரூபாய். ஆனல் 1965–66-ம் ஆண்டிற்குரிய திருத்த மதிப்பீடுகளில் இதற்குரிய செலவினம் 730 லட்சம் ரூபாய் அளவுக்கு உயர்ந்துள்ளது. இத் திட்டங்களுக்காக இந்திய அரசும் 2 கோடி ரூபாய் கூடுதல் நிதி உதவி அளித்துள்ளது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வகை செய்துள்ள ஒரு கோடி ரூபாய் கடன் வசதியையும் உள்ளிட்டு அடுத்த ஆண்டுக்கென ஒதுக்கியுள்ள 862 லட்சம் ரூபாயுடன், இந்தத் திட்டங்கள் நிறைவேறும் வேகம் குறைவுபடாமல், வேளாண்மை உற்பத்தியை மேலும் பெருக்க இயலுமென்று நினைக்கிறோம். அடுத்த

ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பற்பல சிறுபாசனத் திட்டங்களுக்காக குறிப்பிடத்தக்க முறையிலே வகை செய்துள்ள நிதி ஒதுக்கங்கள் கீழ் வருமாறு :—

	(ரூபாய் லட்சத்தில்.)
சிறுபாசனச் சிறப்புத் திட்டம்	307
தூறு அகற்றல், நில மீட்புத் திட்டம்.	26
புதுக் கிணறு உதவித் திட்டம்	302
எண்ணெய் என்ஜின்கள், மின்சார பம்புசெட்டுகள் வழங்கும் திட்டம்.	100
துளைக்கிணறுகள், குழாய்க் கிணறுகள்.	60
கிணறுகளுக்குத் துளைபோடுதல், ஆழப்படுத்துதல் திட்டம். (பாறைகளை உடைக்கும் வசதியுடன்.)	31
வடிமுனைக் கிணற்றுத் திட்டங்கள் (Filter Point Schemes).	36

பெரிய பாசனத் திட்டங்களின் மூலம், வசதிபெறும் பகுதிகளில், ஒரு பாசனப் பயிருக்கு மேல் வெற்றிகரமாகப் பயிர் செய்வதற்கென அப் பகுதிகளில் கிணறுகள் தோண்டுவது அவசியமென்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். கிராமங்களுக்கு மின்சார வசதி செய்வதற்கான நமது திட்டங்களும் இன்றைய நிலையில் மிக முக்கிய இடம் பெறுகின்றன. இத் திட்டத்தில் நமக்கு மகத்தான வெற்றி கிடைத்திருக்கிறது. கிராமப் புறங்களுக்கு மின்சார இணைப்புக் கொடுப்பது ; கிராம மக்களுக்கு நாம் செய்து தரும் வசதி மட்டுமல்ல. ஆனல் இது, உணவு உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்களில்

முதன்மையிடம் அளிக்கப்பட வேண்டிய ஒரு சிறந்த திட்டமும் ஆகும். இவ்வுண்மையை நாடு முழுவதும் இன்று உணர்ந்துள்ளதற்கு, இத் துறையில் நாம் எய்தியுள்ள சாதனைகளே காரணமெனில், அது மிகையாகாது. இத் திட்டத்தின்கீழ், முன்பு நாம் குறித்திருந்த குறிக்கோள் அளவினைக் கடந்து அதற்கப்பாலும் கணிசமாகச் சென்றுள்ளோம் என்பதையறிய இம் மன்றம் மிக்க மகிழ்ச்சியடையும் என நம்புகிறேன். முதலில் 8,000 கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க நாம் நிச்சயித்திருந்த இலக்கிற்கு மாறாக, இப்போது 10,000-க்கு மேற்பட்ட கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு லட்சத்து 35 ஆயிரம் விசை ஏற்றங்களுக்கும் (Pump-sets) மின் இணைப்புக் கொடுக்கப்பட்டு விடும். இதனால், திட்ட இறுதியில், மொத்தம் 2 லட்சத்து 53 ஆயிரம் மின்விசை ஏற்றங்கள் இயங்கிவரும். கிராமங்களுக்கு, மின்சார வசதி கொடுப்பதற்காக அடுத்த ஆண்டுத் திட்டத்தில் 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 25 ஆயிரம் விசை ஏற்றங்களுக்கு மேலாகவே மின் இணைப்புப் பெற முடியும். இவற்றால் குறைந்தது ஒரு லட்சம் ஏக்கராவுக்காவது பாசன வசதி கிடைக்க வகை ஏற்படும். வேளாண்மை உற்பத்திக்கு, கிராம மின்வசதி நேரடியாகத் துணைபுரிவது ஒருபுறமிருக்க, சமுதாய மாற்றத்திற்குத் துணைசெய்யும் ஒரு கருவியாகவும் அது பயன்படுகிறது. புதிய கருத்துக்களையும், தொழில் நுட்பங்களையும் குடியானவர்கள் அறிந்து, அதற்கேற்ப அவர்களின் நோக்கும் போக்கும் மாறுவதற்கும் அது பெரிதும் உதவியாக இருக்கிறது.

நடுத்தரப் பாசனத் திட்டங்கள்.

12. நமது நீர்வளங்களை முழு அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் எல்லையினை நாம் அடைந்துவிட்டாலும், நிறைவேற்றுவதற்கு இன்னமும் வாய்ப்புள்ளதெனக் கருதும் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் சிலவற்றை நமது மாநிலத்தில் மிக விரைந்து நிறைவேற்றி வருகிறோம். பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் பகுதியாக அமைந்துள்ள நீராறு, தேக்கடியாறு இவற்றின் தண்ணீரை எவ்வளவு நல்ல

முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதுபற்றி இன்னும் கேரள மாநிலத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன. எனவே, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்துக்கு, அடுத்த ஆண்டுத் திட்டத்தில் 275 லட்சம் ரூபாய் மட்டுமே வகை செய்யப்பட்டுள்ளது. இரு மாநிலங்களுக்கும் சிறந்த நன்மை பயக்கும் வகையில் விரைவில் ஒரு முடிவு ஏற்படுமென்றும், அதன் காரணமாக அடுத்த ஆண்டில் இந்தத் திட்டத்திற்கு அதிக முதலீடு செய்ய இயலுமென்றும் நம்புகிறோம். அடுத்த ஆண்டுத் திட்டத்தில் சிற்றாறு-பட்டணங்கால் திட்டத்திற்காக 2 கோடியே 33 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதால், இந்த முக்கிய திட்டம் சம்பந்தமான வேலைகள் மிகவும் சுறுசுறுப்பாக நடைபெறும். மற்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் இராமநதி, கடானா நீர்த் தேக்கத் திட்டங்கள், தென்னார்க்காடு மாவட்டத்தில் மணிமுத்தா நதித் திட்டம், வைகைக் கால்வாய்களைப் புதுப்பிக்கும் திட்டம்—ஆகிய இந்த நான்கு புதிய திட்டங்களுக்கும் திட்டக் கமிஷனிடமிருந்து தொழில் நுட்ப அனுமதி கிடைத்தவுடன், இப்பணிகளைத் தொடங்குவதற்காக 40 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். இந்த நான்கு புதிய திட்டங்களுக்காகவும் இப்போது புதிதாக மதிப்பிடப்பட்டுள்ள செலவினம் பின்வருமாறு :—

	(ரூபாய் லட்சத்தில்.)
இராம நதி	87
கடானா	158
மணிமுத்தா நதி	91
வைகைக் கால்வாய்களைப் புதுப்பித்தல்.	395

இந்தத் திட்டங்களின் மூலம் பயனடையும் நிலப்பரப்பினை ஒப்பிட்டு நோக்கும்போது இவற்றிற்காகும் செலவு மிகுதியாயிருப்பினும், மேலும் எடுத்து நிறைவேற்றுவதற்குப் பெரிய பாசனத் திட்டங்கள் வேறு எவையும் இல்லாததால், இம் மாநிலத்திற்குப் பொருந்தும்

வகையிலே இதுசம்பந்தமான வரையறைகளைத் தளர்த்த வேண்டியதன் அவசியத்தைத் திட்டக் கமிஷனுக்கு எடுத்துக்காட்டியுள்ளோம். பொருளாதார அடிப்படையில் பின்னடைந்துள்ள பகுதிகளின் வளர்ச்சிக்கு இத் திட்டங்கள் பெரிதும் உதவியாயிருக்குமென்பதையும் நாம் அவர்களிடம் வற்புறுத்தியுள்ளோம்.

13. கால்வாய்ப் பாசன வசதிகளையும், இறைவைப் பாசன வசதிகளையும் விரிவாக்குவதற்கான திட்டங்களை ஆர்வத்தோடு நிறைவேற்றும் வேளையில், வறண்ட பகுதிகளில், தக்க மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களின் மூலம் நிலத்தின் ஊற்று நீர் வளத்தின் அளவினையும், மண்ணின் ஈரப்பசையினையும் காக்கும் பணியையும் நாம் புறக்கணிப்பதற்கில்லை. மண்வளப்பாதுகாப்பு ஏற்பாடுகளின்மூலம் 1965–66-ல் பயன் அடைந்த நிலப்பரப்பின் அளவு 90,000 ஏக்கர். 1966–67-ல் சுமார் ஒரு லட்சத்து 32 ஆயிரம் ஏக்கர் பயன் பெறும் வகையில் திட்டமிட்டிருக்கிறோம். ஆனால், மூன்றும் திட்டத்தில் இப்பணிகளுக்கான செலவு, சராசரி 55 லட்சம் ரூபாய் அளவில் இருந்து வந்தபோதிலும் 1966–67-ல் இந்த முக்கிய திட்டத்திற்கென்று 113 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்துள்ளோம்.

14. வாடகை-கொள்முதல் அடிப்படையில் டிராக்டர்களை வழங்கும் திட்டமும் மேலும் விரிவாக்கப்படும். நடப்பு ஆண்டில் 100 டிராக்டர்கள் மட்டுமே இத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டன. 1966–67-ல் 250 டிராக்டர்களை வழங்குவதற்கான நிதி வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் விசைக் கலப்பைகள் (Power tillers) வழங்குவதை, வரும் ஆண்டிலிருந்து தொடங்கலாமென்று எண்ணியுள்ளோம். இதற்கென்று வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் குறைந்த அளவுத் தொகை ஒதுக்கப்பட்டிருந்தாலும், மக்களின் ஆர்வத்திற்கேற்ப இந்த நிதி ஒதுக்கத்தைப் பின்னர் அதிகப்படுத்திக் கொள்ளலாம். பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் வேளாண்மைக்கான உழுபடைக்கருவிகளை, சலுகை அடிப்படையில் வழங்கும் திட்டமும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

15. மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் கிராம அளவிலும் நுணுக்க விவரங்களுடன் தீட்டப்படும் வேளாண்மைத் திட்டங்களே, பயன் தருவனவாக இருக்கும். அத்தகைய திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்தும் பணியில், பஞ்சாயத்து யூனியன்கள் சிறந்ததொரு பங்கேற்கலாம். மாநில அளவில் வகுக்கப்பட்டு, நிறைவேற்றுவதற்காக அவைகளிடம் ஒப்படைக்கப்படும் திட்டங்கள் ஒரு புறமிருக்க, உள்ளூர் அளவில் உள்ளூர்த் தேவைகளுக்கிணங்க வகுக்கப்படக்கூடிய வேளாண்மைத் திட்டங்களும் உள்ளன. அத்தகைய திட்டங்களுக்கென்று, நான்காம் திட்டக் காலத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் ஒவ்வொன்றுக்கும் உதவித் தொகையாக 2 லட்சம் ரூபாய் நிதி வகை செய்யப்படும். சம்பந்தப்பட்ட துறைகளின் உதவியைப் பெற்று, இந்தத் திட்டங்களை வகுக்கும்படி பஞ்சாயத்து யூனியன்களைக் கேட்டிருக்கிறோம். இந்தத் திட்டங்கள் வெற்றியடைய வேண்டுமானால், உள்ளூர் பற்றிய விவர அறிவும் ஆர்வ முயற்சியும் பெரிதும் தேவைப்படும். பஞ்சாயத்து யூனியன் மன்றங்களில், பதவி காரணமாக உறுப்பினர்களாக உள்ள இம் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்தத் திட்டங்களை வகுப்பதிலும், பின்னர் அவற்றைச் செயல்படுத்துவதிலும் செவ்விய முறையில் அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். புதிய ரக விதைகளை வழங்குதல், உள்ளூர் எரு வளங்களைப் பெருக்குதல் போன்ற முக்கியத் திட்டங்களின் வெற்றி-தோல்வி, பஞ்சாயத்து யூனியன்கள் காட்டும் அக்கறையைப் பொறுத்தேயிருக்கும் என நான் கூறத் தேவையில்லை. மற்றும், கிராமப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு வேண்டிய வசதிகளைஅளிப்பதற்கான திட்டங்களை வகுப்பதிலும், அவற்றை நிறைவேற்றுவதிலும் பஞ்சாயத்து யூனியன்கள் தொடர்ந்து பங்கினை ஆற்றிவரும். சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் கீழும் ஏனைய சம்பந்தப்பட்ட வளர்ச்சித் தலைப்புகளின் கீழும் ஒதுக்கப்பட்ட தொகைகளை ஒன்று திரட்டி, பஞ்சாயத்து யூனியன்கள் அவற்றை இணைவான பகுதித் திட்டத்திற்கேற்பப் பயன்படுத்திக் கொள்ள வகை செய்திருக்கிறோம். இங்ஙனம் 1966–67-ம் ஆண்டுக்குரிய

பஞ்சாயத்து யூனியன்களின் பங்கு.

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கிராம நீர் வசதித் திட்டங்களுக்காக ஒரு கோடியே 20 லட்சம் ரூபாயும், இணைப்புச் சாலைகள் அமைப்பதற்காக 80 லட்சம் ரூபாயும் தொடக்கப்பள்ளிக் கட்டிடங்களுக்கென 69 லட்ச ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர, கிராமப் பகுதிகளில் நிலைத்து நிற்கும் சமுதாய உடைமைகளைத் தோற்றுவிக்கும் முறையில் வேலை வாய்ப்புகள் குறைந்தும், வேலையின்றியும் உள்ள மனித சக்தியைப் பயன்படுத்திக் கொள்வதற்கேற்ற வகையில் கிராமப்புற மனித சக்தித் திட்டத்திற்காக (Rural Man-Power Programme) 80 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. இத் திட்டங்கள் அனைத்தையும் பஞ்சாயத்து யூனியன்கள் ஆர்வத்தோடு நிறைவேற்றி, கிராமப்புறப் பகுதிகளுக்கும் நகர்ப்புறப் பகுதிகளுக்குமிடையே பொது வான வசதிகளில் தற்போது நிலவிவரும் ஏற்றத் தாழ்வுகளைக் குறிப்பிடத்தக்க வகையில் குறைக்கும் முறையிலே முனைந்து பணியாற்றும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

கூட்டுறவுச் சங்கங்கள்.

16. கிராம அளவில் வேளாண்மைத் திட்டங்களை நிறைவேற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கிற மற்றொரு ஜனநாயக நிறுவனம் கூட்டுறவுச் சங்கமாகும். குறிப் பாக, உர வகைகளை வழங்குவதிலும் கடன் வசதிகளை அளிப்பதிலும் அச்சங்கங்கள் பெரும்பங்கு வகிக்கும். நடப்புத் திட்ட இறுதிக்குள் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் தொகை 42 லட்சம் அளவில் இருக்கும். கூட்டுறவுச் சங்கங்களை ஏற்கெனவே பரவலாக நிறுவி யுள்ளதால், கிராம அளவில் இச் சங்கங்களின் வேலையை மேனிலைப்படுத்துவதில் நாம் இப்போது சிறப்பாக கவனம் செலுத்த வேண்டும். நஷ்டமின்றிப் பணியாற்றுந்திறன் கொண்ட சுமார் ஐந்நூறு கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் செம்மையான வளர்ச்சி பெற, சம்பளம் பெறும் முழு நேரச் செயலாளர்களை அமர்த்திக் கொள்வதற்கு ஏற்ற வகையில் அவைகளுக்கு உதவியளிக்கப்படும். கூட்டு றவுச் சங்கங்களின் மூலம் வழங்கப்படுகிற குறுகிய காலக் கடன்களும், நடுத்தரக் காலக் கடன்களும் 1965–66-ல் இருந்த சுமார் 47 கோடி ரூபாய் அளவிலிருந்து, 1966–67-ல் 52 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தப்படும்.

கூட்டுறவுச் சங்கங்கள், பயனுள்ள தங்கள் பணிகளை விரிவு படுத்துவதில் சமீப ஆண்டுகளில் இந்திய ரிசர்வ் பாங்கு இச் சங்கங்களுக்கு வழங்கிய சலுகைக் கடன், மிகவும் உதவியாக இருந்துள்ளதென்பதை கனம் உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். நமது மாநிலத்திலுள்ள கூட்டுறவுச்சங்கங்கள், பங்கு மூலதனம், சிக்கன நிதி, உறுப்பினர், உறுப்பினர் அல்லாதார் இவர்களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகைகளின் வாயிலாகச் சொந்த நிதி வசதிகளைத் திரட்டு வதில் ஓரளவுக்கு வெற்றியடைந்திருப்பினும், வேளாண்மை முனைப்புத் திட்டங்களின் கீழ் ஏற்படக் கூடிய ஏராளமான நிதித் தேவைகளைக் கருதி, இச் சங்கங்கள் கிராமப் பகுதிகளிலே குடியானவர்களுடைய சேமிப்புகளைத் திரட்டுவதில் தங்களுடைய முயற்சிகளை இரட்டிப்பாக்குவது அவசியமாகும். மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்குகள், கிராமப் பகுதிகளில் இன்னும் பல கிளை அலுவலகங்களைத் திறப்பதன் மூலம் மேலும் வைப்புத் தொகைகளை ஈட்ட முடியும் என்று கருது கிறோம். எனவே, மாவட்டக் கூட்டுறவு மத்திய பாங்குகள், இருபது கிளைகளைத் திறக்கும் வகையில் அவற்றிற்கு உதவி புரிவதற்கான ஒரு திட்டத்தை அடுத்த ஆண்டுத் திட்டத்தில் சேர்த்திருக்கிறோம். இந்தியப் பொருளாதாரத்தை எதிர்நோக்கியுள்ள முக்கியமான சிக்கல் என்னவென்றால், முதலீட்டுத் தொகைகளின் அளவும் சேமிப்புத் தொகைகளின் அளவும் சமமாக உயர வேண்டும் என்பதேயாகும். ஆதாயத்தோடு முதலீடு செய்வதற்கு, கிராமச் சேமிப்புகளைத் திரட்டுவதில் கூட்டுறவு பாங்குகள் சிறந்த முறையில் பெரும்பங்கு ஆற்ற முடியும். நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் விலைவாசிகளின் ஏற்றத்தைக் கட்டுப்படுத்த எந்த அளவிற்குப் பயன்படும் என்பதை நமது திட்டத்தில் நாம் நன்கு உணர்ந்துள்ளோம். நகரப் பகுதிகளில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்காக அடுத்த ஆண்டில் ஏறக்குறைய 45 லட்ச ரூபாய் அளவிற்கு நிதி வசதி அளிப்பதாய் இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது. இவ்வுதவியை நாம் முற்றிலும் பயன்படுத்திக் கொள்வோம். மற்றும் கூட்டுறவுத் துறையில் நவீன அரிசி

ஆலைகளை நிறுவுவதற்காகவும் இந்திய அரசாங்கம் 6 லட்சம் ரூபாய் அளவிற்கு உதவி வழங்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது. நெல் அரைக்கும்போது ஏற்படும் அரிசி விரயத்தைத் தடுத்து, அரிசியின் அளவை மேலும் அடையும் முறையிலே அரைவை முறையைச் சீர்படுத்து வதற்கு இந் நிதி உதவி பெரிதும் பயன்படுத்தப்படும்.

விலங்கின வளர்ப்பு.

17. வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு அடுத்த ஆண்டில் எத்துணை முக்கியத்துவம் கொடுத் துள்ளோமோ, அத்துணை அளவு விலங்கின வளர்ப்பு, மீனளம் ஆகிய இரு துறைகளுக்கும் கொடுத்துள்ளோம். அடுத்த ஆண்டுத் திட்டத்தில் விலங்கின வளர்ப்புத் திட்டங்களுக்கு வகை செய்யப்பட்டுள்ள தொகை ஏறக் குறைய 105 லட்சம் ரூபாயாகும். ஆனால், மூன்றும் திட்டக் கால அளவில் ஆண்டொன்றுக்கு சராசரி 68 லட்சம் ரூபாய் அளவிற்கே முதலீடு செய்துள்ளோம் என்பதை நினைவுகூரின், நான்காம் திட்டக் கால அளவில் இத் திட்ட வேலைகளுக்காக நாம் மிகச் சிறப்பான ஓர் இடத்தை அளித்திருப்பது நன்கு தெளிவாகும். விஞ் ஞான முறைகளில் இனப் பெருக்கம் செய்தல், விலங் கினங்களைப் பேணி வளர்த்தல், பிணிகளைக் கட்டுப்படுத்து தல் ஆகியவற்றின் வாயிலாக மையக் கிராமத் திட்டம் (Key Village Scheme) விலங்கினங்கள் எல்லா வழிகளிலும் வளர்ச்சி பெறுவதைக் குறிக் கோளாகக் கொண்டுள்ளது. இத்துறையில் நாம் மேற்கொள்ளும் திட்ட வேலைகளுக்கெல்லாம் முன் போலவே இது அச்சாணியாக இருந்து வரும். அடுத்த ஆண்டில் 12 புதிய மையக் கிராம வட்டாரங்கள் நிறுவப் படும். மையக் கிராமப் பகுதிகளில் உயர்ந்த இனப் பொலிக் காளைகளைப் பெருக்கும் முயற்சிக்கு, 1966–67-ல் விலங்கின வளர்ச்சிப் பண்ணை ஒன்று கூடுதலாகத் தொடங்கப்படுவதன் மூலம், அரசாங்கம் மேலும் துணை புரியும். நாட்டுப்புறப் பகுதிகளில் விலங்கினங்களுக்கு மருத்துவ உதவி அளிப்பதற்கான வசதிகளைப் பரவலாக்க வேண்டும் என்ற கொள்கைக்கிணங்க, 25 விலங்கின மருந்தகங்களை நிறுவுவதற்கும் வகை செய்யப்பட் பட்டுள்ளது. அடுத்த ஆண்டுத் திட்டத்தில் கோழிப்

பண்ணைகள் வளர்ப்பிலும் சிறந்த நாட்டம் செலுத்தப்படும். 1966–67-ல் எட்டுப் புதிய கோழிப் பண்ணை விஸ்தரிப்பு நிலையங்கள் நிறுவப்படும். கோழிப் பண்ணைகளின் பற்பல திட்டங்களுக்காக 34 லட்சம் ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மற்றும், அடுத்த ஆண்டில் ஆட்டின வளர்ச்சிக்கும், கம்பளிப் பெருக்கத்திற்கும் பன்னிரண்டு வளர்ச்சி நிலையங்களை நிறுவ 16 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக உயர்ந்த ரக ஆடுகளை வளர்க்கமுடியும் என நம்புகிறேன். பாற்பண்ணை, பால் வழங்குத் திட்டங்களை நிறைவேற்றுவதில் இப்போதுள்ள வேகம் நீடித்து நிற்கும். அடுத்த ஆண்டுத் திட்டத்தில் இதற்காக வகை செய்யப்பட்டுள்ள 77 லட்சம் ரூபாயில் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகளை வாங்குவதற்கான கடன்கள் வழங்க 30 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதைச் சிறப்பாகக் கூற விரும்புகிறேன்.

18. அடுத்த ஆண்டுத் திட்டத்தை வகுக்கையில் மீனள வளர்ச்சியை மேலும் ஆர்வத்தோடு செயலாற்றுவதன் மூலம் நமது உணவு ஆதாரங்களைப் பெருக்குவதற்கான சாத்தியக்கூறுகளையும் நாம் கருத்தில் கொண்டிருக்கிறோம். நடப்புத் திட்டக் கால அளவில், இத் துறையின் செலவினங்களுக்காக ஆண்டொன்றுக்குச் சராசரி 51 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதற்கு மாறாக, 1966–67-ல் 105 லட்சம் ரூபாய் அளவிற்கு ஒதுக்கப்பட்டிருப்பதால், இத் துறையின் வளர்ச்சி வேலைகள் மும்முரமாக்கப்படும். குறிப்பாக விசைப் படகுகளைத் தயாரித்து அவற்றை வழங்கும் திட்டம் விரிவாக்கப்படும். இது குறித்து, அடுத்த ஆண்டில் 150 படகுகள் கட்டி வழங்கப்பட வேண்டுமென்பது நமது குறிக்கோள் அளவாகும். நைலான் வலைகள், பருத்தி நூல் போன்ற மீன் பிடிக்கும் சாதனங்கள் முதலியவற்றை வழங்குவதற்கான நிதி ஒதுக்கமும் இதற்கேற்ப உயர்த்தப்படும். இவற்றோடு கூடவே, பிடித்த மீன்களைக் கரை சேர்ப்பதற்கான வசதிகளைச் சீர்ப்படுத்துவதற்காக 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னைத் துறைமுகக் கழகம், மீன்களை இறக்குமதி செய்யும் வசதிகளை மீனள வளர்ச்சி.

விரிவாக்கும், தங்களுடைய திட்டத்தின்கீழ், சென்னைத் துறைமுகத்திலே இதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பார்கள் என்று இந்திய அரசு நமக்குத்தெரிவித்துள்ளது. எனவே, ராயபுரத்தில் இதற்கெனத் தனியே ஒரு துறைமுகம் அமைக்கும் தேவை இருக்காது. உள்நாட்டு நீர்நிலைகளிலும், ஆழநீர்க் கடலிலும் அதன் முகத் துவாரங்களிலும் மீனளங்களை மேம்படுத்தும் திட்டங்களோடு கூடவே, பிடித்த மீன்கள் கெடாவண்ணம் அவற்றைப் பேணுவதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும், விற்பதற்கும் உரிய துணைத் திட்டங்களைப் பெரிய அளவில் செயல் படுத்துவதும் மிகத் தேவையாகும். அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தூத்துக்குடியில் பனி உறை நிலையம் (Freezing Unit) ஒன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொழில் வளர்ச்சி.

19. இவ்வாறு அடுத்த ஆண்டுக்குரிய திட்டத்தில், வேளாண்மை வளர்ச்சியும், அதற்குத் தொடர்பான வேறு பல துறைகளின் வளர்ச்சியும் நமது சிந்தனையைப் பெரிதும் கவர்ந்திருந்தாலும், மக்கள் தொகை நெருக்கம், மிக அதிகமாக உள்ள நமது மாநிலம் போன்ற ஒரு மாநிலத்தில், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்றால் நீண்டகால நோக்குடன் பெருந் தொழில்களையும், சிறு தொழில்களையும் வளர்க்க வேண்டிய இன்றியமையாத தேவையை நாம் மறந்து விடக்கூடாது. தொழில் வளர்ச்சி குறித்த முக்கிய புள்ளிவிவரங்களை ஆராய்ந்து பார்ப்போமானால், கடந்த இரண்டு திட்டக் காலங்களிலும், நமது மாநிலத்தில் தொழில் வளத்திற்கான அடிப்படை எவ்வாறு உறுதியாக அமைக்கப்பட்டுள்ளது என்பது விளங்கும். 1950–51-ல் தொழில் தேவைகளுக்காக 32 கோடி யூனிட் மின்சாரம் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், இந் நிலை 1964–65-க்குள் 160 கோடி யூனிட்டுகளாக, அதாவது முன்னிலும் ஐந்து மடங்கு அதிகமாக உயர்ந்துள்ளதைக் கனம் உறுப்பினர்கள் உன்னிப் பார்க்க வேண்டும். குறிப்பாகத் தமிழ் நாட்டின் இயற்கை வளக்குறைவையும் அடிப்படையான மூலப் பொருள்களையும் எரிபொருள்களையும் நெடுந்

தொலைவிலுள்ள பிற மாநிலங்களிலிருந்து தருவிக்க வேண்டிய இடர்பான நிலையையும் நாம் மறந்துவிடக் கூடாது. பயிற்சி பெற்ற பணியாட்களும், ஆக்க மனப் பான்மை கொண்ட தொழிலாளர் தலைவர்களும், முற்போக்குக் கருத்துகள் உள்ள தொழில் அதிபர்களும், இயற்கையின் வளக் குறைவை ஈடுகட்ட உதவியுள்ளனர். இத்துடன் நல்ல போக்குவரத்து வசதிகளும், செவ்வனே வளர்ச்சிபெற்ற மின்சார இணைப்புகளும் நம் தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி உள்ளன என்பதை நினைக்கும்போது நம்முடைய தொழில் முன்னேற்றம் நமக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கிறது என்பதில் ஐயமில்லை. அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் நல்ல தொரு கொள்கையைப் பின்பற்றி வருவதால், நமது மாநிலத் தொழில் வளர்ச்சிப் பணிகளில் தனியார் துறை குறிப்பிட்டுப் பாராட்டத்தக்க அளவிற்குப் பங்கு வகிக் கிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கார்ப்பொ ரேஷன் மூலம் தொழிலதிபர்களுக்கு நீண்டகாலக் கடன் வசதிகளும், பங்கு மூலதனத்தில், பங்குகள் எடுத்துக் கொள்ளும் வகையிலும் யந்திர சாதனங்களுக்காகச் செலுத்த வேண்டிய தொகைகளுக்காக உத்தரவாதம் அளிக்கும் வகையிலும் உதவியளிக்கும் கொள்கையை அரசாங்கம் பின்பற்றி வந்திருக்கிறது. பங்கு மார்க் கெட் மந்தமாயிருக்கும் இன்றைய சூழ்நிலையில் தமிழ் நாடு தொழில் மூலதனக் கார்ப்பொரேஷன் பங்கு மூலதனத் தொகை பெறுவதற்கு உத்தரவாதம் கொடுத்து உதவியுள்ளது, தனி முக்கியத்துவம் வாய்ந்த தாகும். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கார்ப்பொ ரேஷனில், கூடுதல் மூலதனப் பங்கு எடுத்துக்கொள்ளு வதற்காக, 1966–67-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அரசாங்கம் 25 லட்சம் ரூபாய் வகை செய்துள்ளது. இந்நிதிக்கு இணையான ஒரு தொகையைத் தொழில் வளர்ச்சி பாங்கியும் (Industrial Development Bank) தந்துதவும். அதன்மூலம் தொழில் வளர்ச்சி பாங் கியிலிருந்து கூடுதலான மறுகடன் (Refinance) வசதிகளை இக் கார்பொரேஷன் பெற்று, இம் மாநிலத்தின் தொழிற் பெருக்கத்திற்கு சிறக்கப் பணியாற்றும் என்று நம்பலாம்.

மாநில அரசாங்கத் திட்டங்கள்.

20. நான்காம் திட்டக் காலத்தில் தொழிற் பிரிவுகளை (Units) நிறுவுவதில் மாநில அரசாங்கம் இன்னும் அதிக அளவில் நேரடியாகப் பங்குபெற எண்ணியுள்ளது. இதற்கிணங்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கார்ப்பொரேஷன் ஒன்றை அது நிறுவியுள்ளது. தொடக்கத்தில் இந்தக் கார்ப்பொரேஷன் அரக்கோணத்தில் தொடர்வார்ப்படத் தொழிற்சாலை (Continuous Casting Plant) ஒன்றை நிறுவவும், ராஜபாளையத்தில் 1,200 டன் திறனுள்ள சிமென்ட் தொழிற்சாலை ஒன்றை அமைக்கவும் ஏற்கெனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தொடர் வார்ப்படத் தொழிற்சாலை பற்றிய தொழில் நுட்பத் திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்து அனுப்பும் பொருட்டு ரஷ்யாவிலுள்ள 'மெஸ்ஸர்ஸ். ஸ்டான்கோ இம்போர்ட்' (Messrs. Stanko Import) நிறுவனத்தாருடன் ஓர் உடன்பாடு கையெழுத்தாகியுள்ளது. எளிய தவணைகளில் விலையைச் செலுத்தும் ஏற்பாட்டின்மேல் இத் தொழிற்சாலைக்கு வேண்டிய மூல இயந்திரங்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. சிமென்ட் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் சுண்ணும்புக்கல் படிவங்கள் பற்றிய புலனாய்வுப் பணி முடிவாகிவிட்டது. நில ஆர்ஜித வேலையும் விரைவில் முடிவுறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இயந்திர சாதனங்களையும் தளவாடங்களையும் வாங்குவதற்கான டெண்டர்களும் முடிவு செய்யப்பட்டுவிட்டன. 1966–67-ல் இந்த இரு திட்டங்களுக்கும் ஆகும் உத்தேசச் செலவிற்காக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கார்ப்பொரேஷனுக்கு நிதி உதவி அனுமதிக்கும் பொருட்டு, 1966–67 நிதி நிலை அறிக்கை மதிப்பீடுகளில் 140 லட்ச ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. நடப்புத் திட்டக் கால அளவில் தொழில் துறையில் நாம் சாதித்துள்ள முக்கிய சாதனைகளில், ஒன்பது கூட்டுறவு நூற்பு ஆலைகளை வெற்றிகரமாக நிறைவேற்றி முடித்ததை, சிறப்பாக எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆறரைக் கோடி ரூபாய் மொத்த முதலீடு செய்யப்படுகின்ற இந்த நூற்பு ஆலைகளின் திறன் அளவு, ஒரு லட்சம் கதிர்களுக்கு மேற்பட்டதாகும். இந்த நூற்பு ஆலைகள் மிகக் குறுகிய கால

அளவில், அதாவது 18 மாதங்களுக்குள்ளாகவே நிறுவப்பட்டிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கதாகும். இவ்வாலைகள் ஆண்டுதோறும் ஏறக்குறைய ஒன்பது கோடி ரூபாய் மதிப்புள்ள 66,000 பருத்திநூல் பேல்களை உற்பத்தி செய்வதன் மூலம் கூட்டுறவுத் துறையில் இயங்கும் இரண்டு லட்சம் தறிகளுக்குத் தேவையான, இன்றியமையாத மூலப் பொருள்களை வழங்கும். இந்தக் கூட்டுறவு நூற்பு ஆலைகளை மேலும் விரிவுபடுத்துவதற்காக அவற்றின் பங்கு மூலதனத்திற்கு உதவும் வகையில் 20 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. ஆம்பூர், அமராவதி, படாளம், மோகனூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள நான்கு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் தங்கள் முழுத்திறன் அளவுக்கும் உற்பத்தி செய்து வருகின்றன. இந்த ஆலைகளை மேலும் விரிவுபடுத்துவதற்காகத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அலங்காநல்லூரில் ஒன்றும், கள்ளக்குறிச்சியில் மற்றொன்றுமாக இரண்டு சர்க்கரை ஆலைகளை அமைப்பது பெரும்பாலும் முடிவடையும் தறுவாயில் உள்ளது. புதிய சர்க்கரை ஆலைகளின் பங்கு மூலதனத்திற்கு உதவி புரியவும், ஏற்கெனவேயுள்ள ஆலைகளை விரிவு படுத்தவும் அடுத்த ஆண்டிற்குரிய திட்டத்தில் 35 லட்ச ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசுத் திட்டங்கள்.

21. நமது மாநிலத்தில், மத்திய அரசு நேரடியாகச் செயல்படுத்திவரும் பெரிய தொழிற் திட்டங்கள், திருப்திகரமாக முன்னேறி வருகின்றன. அத்தகைய திட்டங்கள் அனைத்திலும் மிகப் பெரியதான நெய்வேலி-பழுப்பு நிலக்கரித் திட்டத்தின் மூலதன முதலீடு 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் 140 கோடி ரூபாய் அளவில் இருந்தது. இதுவரையில் ஏறக்குறைய 50 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி தோண்டி எடுக்கப்பட்டு, பெரும்பாலும் மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. நெய்வேலி அனல் மின்சார நிலையத்தின் இரண்டாம் நிலையைச் சேர்ந்த ஆறுவது யூனிட் 1965 ஆகஸ்டில் இயங்கத் தொடங்கியதால், இந்த மின்சார நிலையத்தின் மின் உற்பத்தித் திறன் 300 மெகவாட்டாக உயர்ந்துள்ளது. ஏழாவது யூனிட்டுக்கு வேண்டிய

யந்திர தளவாடங்கள் பெறப்பட்டு, அதற்கான கட்டிட வேலைகள் நடந்தேறி வருகின்றன. ஏழாவது யூனிட்டின் முதல் கொதிகலன் 1966 ஏப்ரல் மாதத்திற்குள் வேலை தொடங்கிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்துடன் 100 மெகவாட் திறனுள்ள ஏழாவது யூனிட் முழுவதும் 1966 ஆகஸ்ட் மாதத்திற்குள் கட்டி முடிக்கப் பட்டு விடும். 1965 ஆகஸ்ட் மாதத்தில் சுட்ட கரி அச்சுக்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை (Briquetting Carbonising Plant) தன் உற்பத்தியைத் தொடங் கியது. இதுவரையில் ஏறக்குறைய 14,000 டன் சுட்ட கரி அச்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. உரத் தொழிற்சாலை சம்பந்தமான கட்டிட வேலைகள் அனைத்தும் முடிக்கப்பட்டுவிட்டன. இந்தத் தொழிற் சாலையின் தொடக்கத்தில் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் நீங்கி, 1966 மார்ச் இறுதிக்குள் உற்பத்தியைத் தொடங் கலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் நமது மின்சார இணைப்புக்கு, நெய்வேலியிலிருந்து கிடைத்த உதவி மிகப் போற்றத்தக்கதாகும். அனல் மின்சார நிலையங்களை மேலும் விரிவு படுத்த வேண்டிய அவசியத்தை இது நன்கு வலியுறுத்திக் காட்டுகிறது.

22. திருச்சிராப்பள்ளியில் உயர் அழுத்தக் கொதி கலன் தொழிற்சாலையின் (High Pressure Boiler Plant) கட்டிட வேலை பெரும்பாலும் முடிந்து சில பகுதிப் பொருள்களின் உற்பத்தி வேலை தொடங்கப்பட்டு விட்டது. இத் தொழிற்சாலையின் தற்போதைய கொதிகலன் கொள் அளவான 720 மெகவாட் அளவினை நான்காம் திட்டக் காலத்தில் 2,000 மெகவாட்டுக்கு உயர்த்துவதற்கான விரிவாக்க வேலைத் திட்டங்கள் இப்போது வகுக்கப்பட்டு வருகின்றன. ஹிந்துஸ்தான் டெலிபிரின்டர் நிறுவனமும் உற்பத்தியைத் தொடங்கி விட்டது. இதன் உற்பத்தித் திறன் அளவை விரிவு படுத்துவதற்கான ஏற்பாடுகளை இந் நிறுவனம் மேற் கொண்டிருக்கிறது. ரஷ்ய உடனுழைப்புடன் (Russian Collaboration) நிறுவப்பட்டு வரும் அறுவைக் கருவிகள் தொழிற்சாலையும் 1965 செப்டம்பரில் உற்பத்தியைத் தொடங்கிவிட்டது. இத் தொழிற்சாலை 25 லட்சம்

அறுவைக் கருவிகளை உற்பத்தி பண்ணும் நோக்கம் கொண்டது. உதகையில் ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை சம்பந்தமான வேலையில் மேலும் முன்னேற்றம் கண்டுள்ளது. 1966 ஜூன் மாதத்திற்குள் இந்தத் தொழிற்சாலையும் வேலை தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பாதுகாப்பு அமைச்சகத்தால் ஆவடியில் அமைக்கப்பட்டு வரும் கனரக வாகனத் தொழிற்சாலை, குறித்த காலமாகிய டிசம்பர் மாதத்தில் அதன் முதல் படைப்பான 'விஜயந்தா' என்னும் பேர் கொண்ட டாங்கியைச் செய்து முடித்தது.

23. நான்காம் திட்டக் காலத்தில் நமது மாநிலத்திற்கென வகுக்கப்பட்டுள்ள பெரிய தொழில் திட்டங்களில் ஒன்று, அமெரிக்க சர்வதேச எண்ணெய்க் கம்பனி (American International Oil Company), ஈரான் தேசீய எண்ணெய்க் கம்பனி (National Iranian Oil Company) இவற்றின் உடனுழைப்புடன் சென்னைக்கருகே மணலியில் பெட்ரோலியச் சுத்திகரிப்புச் சாலை ஒன்றினை நிறுவுவதாகும். இச் சுத்திகரிப்புச் சாலை முதலில் 25 லட்சம் டன் பச்சை எண்ணெயைச் (Crude Oil) சுத்தம் செய்யவும், அப்பால் 35 லட்சம் மெட்ரிக் டன் அளவுப் பச்சை எண்ணெயைச் சுத்தம் செய்வதற்கேற்ப விரிவு செய்யும் வாய்ப்புடனும் அமைந்திருக்கும். இந்த சுத்திகரிப்புச்சாலையை நிறுவுவதற்கான ஒப்பந்தம் அண்மையில் கையொப்பமாகியது. சுத்திகரிப்புச்சாலை 1968-ம் ஆண்டுத் தொடக்கத்தில் வேலை தொடங்குமென எதிர்பார்க்கிறோம். இதையொட்டி, இந் நாட்டிலேயே மிகப் பெரிய உரத் தொழிற்சாலையாக விளங்கும் வண்ணம் ஆண்டொன்றுக்கு 2 லட்சம் டன் நைட்ரஜன் உர உற்பத்தி செய்யும் திறன்பெற்ற, ஓர் உர ஆலையும் நிறுவப்படும். நெய்வேலி-சேலம் உருக்காலைத் திட்டம் தொழில் நுட்ப முறையிலும் பொருளாதார வகையிலும் நடைமுறைக்கு ஏற்ற ஒன்றே என்பதை மெசர்ஸ் தஸ்தூர் கம்பனியார் தயாரித்த விரிவான திட்ட அறிக்கை ஏற்கெனவே உறுதிப்படுத்தியுள்ளது. ஜப்பானிய ஆலோசனை

நிலையம் 1965 ஆகஸ்டில் நியமித்து அனுப்பிய பொறியாளர்கள் அடங்கிய ஆய்வுக் குழு ஒன்று நெய்வேலி-சேலம் உருக்காலைத் திட்டம் குறித்த பற்பல கூறுகளை நேர் இடத்திற்கே சென்று ஆய்வு செய்தது. இத் திட்டத்திற்குத் தேவைப்படும் மூலப் பொருள்கள், ஏனைய வசதிகள் குறித்து அவர்கள் விரிவாக ஆராய்ச்சி செய்தனர். நமது மாநில நான்காம் திட்டத்தில் நிறைவேற்றக் கருதியுள்ள சில தொழிற் திட்டங்களுக்கு ஜப்பானிய உதவியைப் பெறும் சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக அண்மையில் ஜப்பானுக்குச் சென்றிருந்த நமது தொழில் அமைச்சர் அவர்களும் நெய்வேலி-சேலம் உருக்காலைத் திட்டம் குறித்த முக்கிய செயல் நிகழ்ச்சிகள் மீது ஜப்பானிய நிபுணர்களுடன் உரையாடல் நடத்தியுள்ளார். ஜப்பானிய ஆலோசனை நிலைய ஆய்வுக் குழுவினரின் அறிக்கை விரைவில் இறுதி செய்யப்படுமென எதிர்பார்க்கிறோம். அதன்பின்னர், கூடிய விரைவில் இத் திட்டம் மேற்கொள்ளப்படுமெனவும் நம்புகிறோம்.

24. மின்சாரக் குறை, மூலப் பொருள்களின் பற்றுக்குறை, அன்னியச் செலாவணித் தட்டுப்பாடு, பணப்புழக்கத்தில் உள்ள இறுக்கமான நிலைமை—இவை போன்ற இடையூறுகள் பல இருப்பினும் அன்னிய உதவி தாராளமாகக் கிடைப்பதில் உள்ள தற்போதைய தடைகள் நீங்கும்போது நமது மாநிலத்திலுள்ள தொழிற் பிரிவுகள் நான்காம் திட்டக் காலத்தில் மேலும் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கலாம். கடந்த பத்தாண்டுகளில் உற்பத்தித் திறன் பெருமளவில் வளர்க்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து பண்டங்களை இறக்குமதி செய்யும் பொருள்களுக்கு மாறான நிகர் பொருள்களை உற்பத்தி செய்யும் வழிவகைகளை நம் நாட்டுத் தொழிலதிபர்களும், விஞ்ஞானிகளும் தொழில் நுட்ப வல்லுநர்களும் ஆராய்ந்து, இத் துறையில் நமது பொருளாதாரம் மேன்மேலும் தன்னிறைவு பெற்று விளங்குவதற்கான வழிவகைகளைக் காண வேண்டும். அப்பால், உற்பத்திச் செலவுகளைக் குறைத்து நமது தொழில்களின் போட்டியிடும் திறனை வளர்ப்பதற்கு,

எல்லாத் துறைகளிலும் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. உற்பத்திப் பெருக்கத்தின் சிறப்பினைப்பற்றி, அத் துறையில் தொடர்புடைய தொழிலாளர்கள்-முதலாளிகள் அனைவரின் நாட்டத்தையும் ஒருங்கே ஈர்க்கும் வண்ணம் நடப்பு ஆண்டினை இந்திய உற்பத்தி ஆண்டாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருப்பது மிகப் பொருத்தமான ஒரு செயலாக இருக்குமென்று இச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

25. நடப்புத் திட்டக் கால அளவில், சிறு தொழில்களின் வளர்ச்சியும் ஊக்கமளிப்பதாயுள்ளது. தனியார் துறையில் பல சிறு தொழிற் பிரிவுகளை (Units) ஏற்படுத்துவதற்கு தொழிற்பேட்டைகளை நிறுவியது அவர்களுக்குப் பெருந் துணையாய் அமைந்துள்ளது. நடப்புத் திட்டக் காலத்தில் அனுமதித்துள்ள 13 புதிய தொழிற்பேட்டைகளில், 70 பிரிவுகளுடன் கூடிய அம்பத்தூர் தொழிற்பேட்டைதான் மிகப் பெரியது. இந்தத் தொழிற்பேட்டையின் முதல் நிலை வேலை ஏற்கெனவே முடிந்துவிட்டது. கும்பகோணத்தில் நிறுவக் கருதியுள்ள தொழிற்பேட்டையைத் தவிர, ஏனைய தொழிற்பேட்டைகள் அனைத்தும் படிப்படியான திட்டப்படி முடிவுபெறும் நிலையில் உள்ளன. நடப்புத் திட்டக் காலத்தில் இந்தப் பணிக்காகத் தொடக்கத்தில் 320 லட்ச ரூபாய் வகை செய்யப்பட்டிருந்தாலும், திட்ட இறுதிக்குள் 501 லட்ச ரூபாய் அளவிற்குப் பயன்படுத்தப்பட்டுவிடும். சிறு தொழில்கள்.

26. மாநில அரசாங்கம் நேரடியாக நடத்தும் சிறு தொழிற்பிரிவுகளிலும் மனநிறைவு கொள்ளும் அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மூன்றும் திட்டக் கால இறுதியில் அத்தகைய தொழிற்சாலைகள் 63 இயங்கி வரும். 1965–66-ல் இவைகளின் உற்பத்தியளவு நான்கு கோடி ரூபாய் எனவும், இவற்றின் மூலம் ரூ 28·5 லட்சம் லாபம் கிட்டும் எனவும் மதிப்பிடப்படுகிறது. இவற்றை நிர்வகிப்பதற்காக சிறு தொழில்கள் கார்ப்பொரேஷன் ஒன்று நிறுவப்பட்டுள்ளதால், இவை வணிக முறையில் செயல்பட்டு, இவற்றின் முதலீட்டுக்கேற்ப நமக்கு

நியாயமான லாபம் கிட்டுமென்று எதிர்பார்க்கலாம். தொழிற்பேட்டைகளை விரிவுபடுத்தும் திட்டம் அடுத்த ஆண்டு தொடர்ந்து செயல்படுத்தப்படும். ஹோசூரிலும் மற்றும் மூன்று கோட்டத் தலைமையிடங்களிலும் புதிய தொழிற்பேட்டைகளை, வரும் ஆண்டில் நிறுவ வகை செய்யப்பட்டுள்ளது. தனித் தனித் தொழிலுக்குரிய தொழிற்பேட்டைகளின் மூலம் (Functional Industrial Estates) நல்ல பலன்கள் கிட்டியுள்ளதால், அடுத்த ஆண்டுத் திட்டத்தில் சென்னையில் மின்சாரக் கருவித் தொழில்களுக்கென ஒரு தொழிற்பேட்டையை நிறுவவும் கருதியுள்ளோம். மூலப் பொருள்கள் கிடைக்காததால் பல சிறு தொழிற்பிரிவுகள் இன்று, அவற்றின் திறன ளவிற்கு மிகக் குறைந்தே பணியாற்றி வருகின்றன. குறிப்பாக இரும்பல்லாத உலோகங்கள் (Non-ferrous Metals) இப்போது பற்றுக்குறையாக உள்ளன. எனவே, உள்நாட்டில் அகப்படும் உலோக ஆதாரங்களின் வளத்தை அதிகமாக அடைவதற்கு நமது திட்டத்தில் முதலிடம் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில்தான் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள மாமந்தூரில், அங்குத் திண்ணமாய்க் கிடைக்குமென்று தெரிந்துள்ள 10 லட்சம் டன் உலோகக் கனிகளைப் பயன்படுத்தி, பலவகை உலோகச் சுரங்கத் திட்டத்தின் வளர்ச்சிக்குச் சிறப்பிடம் அளிக்கிறோம். 1 கோடி ரூபாய் அளவில் முதலீடு செய்ய வேண்டியுள்ள இத் திட்டம் பல நிலை களில் நிறைவேற்றத்திற்காக எடுத்துக்கொள்ளப்படும். எனினும், முன்னோடி வேலைகளுக்காக அடுத்த ஆண்டுத் திட்டத்தில் 5 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. மற்றும், நமது மாநிலத்தில் கிடைக்கக்கூடிய, பொரு ளாதார வகையில் பலன் அளிக்கும் ஏனைய கனிவளங்களை நாடிக் கண்டுபிடிக்கும் பணியையும் விரைவுபடுத்த எண்ணியுள்ளோம். இதற்காக, மாநிலப் புவியியல் ஆய்வுத் துறைக்குத் (State Geological Department) தேவையான பணியாளர்களையும் இயந்திரங்களையும் வகை செய்து கொடுப்பதன் மூலம் அத் துறை உரிய வகையில் வலுவூட்டப்படும். 1966–67-ல் புவியியல் துறையின் வேலைகளை விரிவாக்கும் பணிக்காக ரூ 10 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

27. நடப்பு ஆண்டில் மின்சார உற்பத்தி, விசை அனுப்பு முறை (Generation and Transmission) குறித்த திட்டங்களின் செயல் வேகம் செவ்வனே நடந்தேறி வருகிறது. இதற்கெனத் திட்டத்தில் 25 கோடி ரூபாய்க்கு மேலாகவே வகை செய்யப்பட்டுள்ள தொகையை முற்றிலும் பயன்படுத்திக் கொள்வோம். குந்தா மூன்ருவது நிலையத்தில் 60 மெகவாட் உற்பத்தித் திறனுள்ள யூனிட்டும், மேட்டூர் குடைவரைத் திட்டத்தின் 50 மெகாவாட் திறனுள்ள முதல் பிரிவும், பெரியாற்றில் 35 மெகாவாட் திறன் கொண்ட நான்காவது யூனிட்டும் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளன. மேட்டூரில் ஒவ்வொன்றும் 50 மெகவாட் திறனுள்ள மற்றும் மூன்று யூனிட்டுகள் இவ்வாண்டு முடிவிற்குள் இயங்கக்கூடிய நிலையில் இருக்கும். ஆனுல் மேட்டூரில் நீர்மட்ட அளவு உயரக்கூடிய அடுத்த பாசனப் பருவத்தின் தொடக்கத்தில்தான் இந்த யூனிட்டுகளை மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்த முடியும். 50 மெகவாட் விசைத் திறனுள்ள குந்தா நான்காவது மின் நிலையமும் உற்பத்தியைத் தொடங்கிவிட்டது. சர்க்கார்பதி மின் நிலையமும் ஜூலையில் அடுத்த பாசனப் பருவம் தொடங்குவதற்குமுன் செயல்படத் தயாராகிவிடும். நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சாரம் நீங்கலாக, சென்னை மின்சார இணைப்பின் உற்பத்தித் திறன் 1,070 மெகவாட்டாக இருக்கும். இது தொடக்கத்தில் மூன்ரும் திட்ட அளவான 1,040 மெகவாட் இலக்கினைக் கடந்து நிற்பதை நாம் உணர வேண்டும். இவ்வாறு இருப்பினும், மின்சார நீர்த் தேக்கங்களில் நீர்மட்ட அளவு எதிர்பாராத அளவுக்குக் குறைந்திருந்ததால், நடப்பு ஆண்டில் தொடர்ந்து மின்சார வெட்டினைச் செயல்படுத்த வேண்டி வந்தது. இது நமது மின் இணைப்பில் நீர் மின்சார உற்பத்தியிலும் அனல் மின்சார உற்பத்தியிலும் உள்ள பெரிதும் சமனற்ற நிலையை நமக்கு உணர்த்திக் காட்டியுள்ளதோடு, இந்த நிலையைப் போக்குவதற்கான செயல்களை மேற்கொள்ள வேண்டிய தன் அவசியத்தையும் நமக்கு எடுத்துக் காட்டியுள்ளது. 340 மெகவாட் உற்பத்தித் திறன் கொண்ட அனல் மின்சார நிலையம் ஒன்றை எண்ணூரில் நிறுவுவதற்கான மின்சார உற்பத்தி.

வேலைகளை நாம் ஏற்கெனவே மேற்கொண்டுள்ளோம். செக்கோஸ்லோவாகியாவுடன் தொழில் நுட்ப முறை பற்றி நடத்திய பேச்சுவார்த்தைகள் பூர்த்தியாகி விட்டன. இந்த நிலையத்திற்குத் தேவையான இயந்திரங்களைத் தருவிப்பதற்கான ஆணைகள் விரைவில் வழங்கப்படும். அடுத்த ஆண்டில், திட்டத்தின் பகுதியாக 3 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கியுள்ளதால், இதற்கான வேலைகள் மிக விறுவிறுப்பாக நடைபெறும். பேசின் பிரிட்ஜ் அனல் மின்சார நிலையத்தில் 30 மெக வாட் கூடுதல் உற்பத்தித் திறன் ஏற்படுத்தும் வேலை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதற்கென அடுத்த ஆண்டுத் திட்டத்தில் 79 லட்ச ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. ஆனைமலை நீர் மின்சாரத் திட்டத்திற்கும், குந்தா நீர் மின்சாரத் திட்டத்தின் மூன்றும் நிலைக்கும் தேவைக்கு ஏற்ற அளவிற்கு நிதி வகை செய்யப்பட்டுள்ளது. கோதையாறு நீர் மின் சாரத் திட்டத்திற்காக அடுத்த ஆண்டுத் திட்டத்தில் 3·5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதால், கோதையாறு திட்டத்தின் வேலைகளும் விரைந்து முன்னேறும். மொத்தத்தில், கிராம மின்சார வசதித் திட்டங்கள் உட்பட, மின்சாரத் திட்டங்களுக்காக 23 கோடியே 70 லட்சம் ரூபாய் முதலீடு செய்யக் கருதியுள்ளோம். இதில் 13 கோடியே 30 லட்சம் ரூபாய் அளவிற்குத் தமிழ்நாடு மின்சார போர்டுக்குக் (State Electricity Board) கடன் உதவியாக மாநில அரசாங்கம் வழங்கும். எஞ்சிய தொகையை மின்சார போர்டு தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், வெளியில் எழுப்பும் கடன்களிலிருந்தும் சரிக்கட்டும். அந்நியச் செலாவணி மிகப் பற்றுக்குறையாக உள்ள இத் தருணத்தில், முன்கூட்டியே அந்நியச் செலாவணிக்கென உறுதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிராத, திட்டங்கள் எவற்றிற்கும் அடுத்த ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கத் திட்டக் கமிஷனால் ஒப்புதல் தர இயலவில்லை ஆயினும், புதிய திட்டங்களைத் தயாரித்து நாம் ஆயத்தமாக வைத்திருந்தால்தான், அந்நிய உதவி கிடைக்கும் வாய்ப்புகள் அபிவிருத்தி அடைந்தவுடன் அவற்றிற்கு அனுமதிபெறுவது சாத்தியமாகும். தூத்துக்குடி அனல் மின்சார

நிலையத் திட்ட அறிக்கை ஏற்கெனவே இந்திய அரசாங்கத்திடம் உள்ளது. அதற்கு வேண்டிய தொழில் நுட்ப ஒப்புதலை அவர்கள் விரைவில் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். 100 மெகவாட் உற்பத்தித் திறனுள்ள பாண்டியாறு-புன்னப்புழா திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து, கேரள அரசாங்கத்துடன் ஓர் ஒப்பந்தமாகியுள்ளது. இந்தத் திட்டமும் இப்போது இந்திய அரசின் அனுமதியை எதிர்நோக்கியுள்ளது. தற்போதுள்ள குந்தா III, IV நீர் மின்சார நிலையங்களில் 110 மெகவாட் உற்பத்தித் திறன் கொண்ட கூடுதல் யூனிட்டுகளை நிறுவுவதும் நான்காம் திட்டச் செயற்குறிப்பிலுள்ள திட்டங்களில் ஒன்றாகும். இந்தத் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டாலும் கூட, மின்சார உற்பத்தி நம் தேவையை விடக் குறைவாகவே யிருக்கும். எனவேதான், காலஞ்சென்ற விஞ்ஞான மேதை டாக்டர் பாபா அவர்களின் கூரிய மதிக்கும், தொலைநோக்கிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கப்போகும் கல்பாக்கம் அணு மின்சார நிலையத்தை விரைந்து நிறைவேற்றுவதற்கு நாம் அதிக முக்கியத்துவம் அளிக்கிறோம்.

28. தொழிற் துறையின் வளர்ச்சிப்போக்கு, பயிற்சி பெற்ற பணியாட்கள் கிட்டுவதைப் பொறுத்துள்ளது. எனவேதான், தொழில் நுட்பக் கல்வித் திட்டங்களில் நாம் போதிய கவனம் செலுத்தி வருகிறோம். இப்போது நம் மாநிலத்தில் இந்தியத் தொழில் நுட்ப நிலையம் (Indian Institute of Technology) உட்பட பன்னிரண்டு பொறியியற் கல்லூரிகளும் சமையற்கலை தொழில் நுட்ப நிலையமும் (Institute of Catering Technology) உட்பட முப்பத்தைந்து பல் தொழிற் பள்ளிகளும் (Polytechnics) உள்ளன. பொறியியற் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை இரண்டாம் திட்ட இறுதியில் 1,157 ஆக இருக்க, மூன்றாம் திட்டக் காலத்தில் அது 2,167 ஆக உயரும். இதைப்போலவே, பல் தொழிற்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கையும் மூன்றாம் திட்டக் காலத்தில் 2,910-லிருந்து 4,792-ஆக

தொழில் நுட்பக் கல்வி.

உயரும். உயர்நிலைப் பள்ளி அளவில் மாணவர்களுக்குப் பொறியியல் பாடங்களில் கல்வி புகட்டுவதற்கான 14 இளநிலைத் தொழிற்பள்ளிகள் (Junior Technical Schools) நிறுவப்பட்டுள்ளன. தொழில் நுட்பக் கல்வித் திட்டங்களுக்காக 1,63 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதால், ஏற்கெனவேயுள்ள தொழில் நுட்பக் கல்வி நிலையங்களை விரிவுபடுத்துவதற்கும், வளர்ப்பதற்கும் முதலிடம் கொடுத்து அடுத்த ஆண்டில் அக் கல்வித் திட்டங்களின் முன்னேற்றம் முன்போலவே இடையீடு எதுவுமின்றி நிறைவேற வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. செயற்குறிப்பிலுள்ள திட்டங்களில் சேலத்தில் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் அரசாங்கப் பொறியியற் கல்லூரியை முழு நிலை பெற்ற கல்லூரியாக மேனிலைப்படுத்தும் பணி சிறப்பான இடம் பெறும் என்பதை அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென்று ரூ 30 லட்சம் வகை செய்திருப்பதிலிருந்தே நன்கு அறியலாம். பல்தொழிற் பள்ளிகளிலே தூத்துக்குடியிலுள்ள அரசாங்க பல்தொழிற் பள்ளிக்கென நிலையான கட்டிடங்கள் கட்டும் பணிக்கு ரூ 3 லட்சம் வகை செய்யப்பட்டு, அதற்கு முதன்மையிடம் அளிக்கப்பட்டுள்ளது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள மகளிர்க்கான அரசாங்கப் பல்தொழிற் பள்ளிகளின் கட்டிடங்களுக்காக ரூ 6 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள மகளிர் பல்தொழிற் பள்ளிக்குரிய கட்டிட வேலை தொடங்கப்பட்டுவிட்டது. ஏனைய இரண்டு இடங்களிலும் இவ்வேலை, நில ஆர்ஜிதம் செய்து முடிந்தவுடன் மேற்கொள்ளப்படும். தற்கால பொருளாதாரத்தின் பற்பல தேவைகளுக்கேற்பத் தொழில் நுட்பக் கல்வித் திட்டங்களைப் புதுவழிகளில் திருப்பிவிட வேண்டிய அவசியத்தை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. நெசவுத் தொழில் நுட்ப நிலையம் (Institute of Textile Technology) ஒன்று நடப்பு ஆண்டில் சென்னையில் தனித்துச் செயல்படத் தொடங்கியுள்ளது. அதற்குக் கட்டிடங்கள் கட்டுவதற்காக தற்போதைய வரவு-செலவுத் திட்டத்தில் ரூ 7 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1965–66-ல் வாணிகத் துறைப் படிப்பு நிலையம் (Institute of Commercial

Practice) ஒன்றும் நிறுவப்பட்டிருப்பது, தொலை நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட முக்கியமான மற்று மொரு புதிய வளர்ச்சியாகும். இந்த நிலையம் மேலும் மேனிலைப்படுத்தப்படும். இதற்கென இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ 4 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

29. கடந்த 10 ஆண்டுகளில் வேகமாகப் பெருகி வரும் தொழில் வளர்ச்சியின் காரணமாய், பயிற்சிபெற்ற கைவினைப் பணியாளர்கள் (Craftsmen) ஏராளமாகத் தேவைப்படுகின்றனர். கடந்த இரு திட்டக் கால அளவுகளிலும் பெரிய அளவில் புதிய தொழிற் பயிற்சி நிலையங்களைத் தொடங்குவதற்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இப்போது நமது மா நிலத்தில் ஏறக்குறைய 9,600 பேருக்கு இடவசதி அளிக்கிற 30 தொழிற் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இத் தொழிற் பயிற்சி நிலையங்களின் இடவசதியை நான்காம் திட்டக் காலத்தில் மேலும் சுமார் 10,000 பேரைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் அகலப்படுத்தக் கருதி யிருக்கிறோம். தொடக்கத்தில் ஏற்கெனவேயுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் 1966–67-ல் கூடுதலாக 3,000 பேருக்கு இடவசதியளிக்க வகை செய்ய எண்ணி யுள்ளோம். இவ்வாறு கூடுதலான மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கிணங்க, இத்துறைக்கு 1966–67-ம் ஆண்டிற்குரிய திட்டத்தில் மாநிலத்தின் பங்காக ரூ 52 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

30. பொருள் வளங்களையும், மாந்தரின் திறன் ஆற்றல் களையும் வளர்க்கும் வகையிலே நமது திட்டம் இரண் டிற்கும் சரி நிகரான இடம் தருகின்றது. இந்தக் கருத்தின் அடிப்படையில் நாம் பார்த்தால், கல்விக்காக நாம் செய்யும் செலவினங்களை ஒரு வகையான முதலீடாகவே கொள்ளவேண்டும். இத்துறையில் கடந்த திட்டக் காலத்தில் நாம் அடைந்துள்ள முன் னேற்றம் எந்த அளவைக் கொண்டு கணக்கிட்டுப் பார்த் தாலும் பாராட்டத்தக்க முறையிலே உள்ளது என்று தான் சொல்ல வேண்டும். நடப்புத் திட்டக் கால பொதுக் கல்வி.

இறுதிக்குள் 6—11 வயதுத் தொகுதியில் 92 சதவிகித அளவிலும், 11—14 வயதுத் தொகுதியில் 49 சதவிகித அளவிலும், 14—17 வயதுத் தொகுதியில் ஏறக்குறைய 31 சதவிகித அளவிலும் பள்ளிகளில் மாணவர்கள் சேர்ந்து விடுவார்கள். இச்சாதனைகள் தேசீய சராசரியைவிடக் கணிசமான அளவிற்கு மேற்பட்டவை என்று சொன்னால் அது மிகையன்று. சமுதாயத்தில், குறிப்பாக, மிக எளிய நிலையில் உள்ளவர்களுடைய குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்ப்பதுபற்றி நாம் எப்போதுமே அதிக அக்கறை காட்டி வந்திருக்கிறோம். அவர்களுக்குக் கல்வி வசதிகள் கிடைப்பதில் இதற்கு முன் இடையூறாக இருந்த பற்பல சமுதாய, பொருளாதாரத் தடைகளையெல்லாம் படிப்படியாக அகற்றி வந்துள்ளோம். நண்பகல் உணவுத் திட்டத்திற்கு ஆகும் செலவினம் அடுத்த ஆண்டில் 2 கோடி ரூபாய் அளவிலிருக்கும் எனத் தெரிகிறது. இத்திட்டத்தாலும் பொதுமக்களின் ஒத்துழைப்பையும் நல்லாதரவையும் துணையாகக் கொண்டு சிறுவர்களுக்கு நிகராடைகள் (Uniforms) வழங்கும் ஏற்பாட்டினாலும் சமுதாயத்தில் வாய்ப்புக் குறைந்த வகுப்பினர்களின் குழந்தைகள் பெருமளவில் பள்ளிகளில் சேருவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க முடிந்தது. பள்ளித் தொடக்க நிலையில் நூற்றுக்கு நூறு பிள்ளைகள் பள்ளிகளில் சேர்க்கப்படவேண்டும் என்ற எண்ணம் ஈடேறுவதற்காக நான்காம் திட்டத்தில் ஏழைச் சிறுவர்கள் அனைவருக்கும் பாட புத்தகங்கள் இலவசமாக வழங்க வகை செய்திருக்கிறோம். நான்காம் திட்டத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ஒன்று முதல் மூன்றும் வகுப்பு வரையில் நண்பகல் உணவுத் திட்டத்தின் நன்மைகளைப் பெற்றுவருகிற எல்லாச் சிறுவர்களுக்கும் பாட புத்தகங்களை இலவசமாக வழங்குவதை மேற்கொள்ள நினைத்திருக்கிறோம். இதற்காக ஆண்டுதோறும் பெருமளவுத் தொகை மேன்மேலும் செலவழிக்க வேண்டுமென்றாலும், நமது சமுதாய, பொருளாதார தத்துவக் கோட்பாட்டிற்கும் மக்கள் அனைவருக்கும் சமவாய்ப்பு அளிக்க வேண்டுமென்கிற நமது கொள்கைக்கும் இணங்க, இந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றியே ஆக வேண்டும்.

8—14 வயதுத் தொகுதியில் தொடக்கப் பள்ளி வகுப்புகளிலும், உயர் தொடக்கப் பள்ளி வகுப்புகளிலும் 3·5 லட்சம் சிறுவர், சிறுமியர்களைக் கூடுதலாகச் சேர்த்துக் கொள்வதற்கிணங்க அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் போதிய நிதி வகை செய்துள்ளோம்.

31. தொடக்கக் கல்வி வசதிகள் பெருகியிருப்பதற்கேற்ப, உயர்நிலைக் கல்வி வசதிகளையும் அதிகரிக்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது. இன்னும் சொல்லப்போனால், வருங்காலத்தில் கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கப்படும் தொகையில் பெரும் பகுதி உயர்நிலைக் கல்விக்காகவே செலவழிக்க வேண்டிவரும். உயர்நிலைக் கல்வி வரையில் அனைவருக்கும் இலவசக் கல்வி அளிப்பது என்று முதன்முதலாக இரண்டாண்டுகளுக்கு முன் முடிவு செய்து, நடவடிக்கை எடுத்தோம். இதனால், நாம் எதிர்பார்த்தது போலவே பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இத்துறையில் வளர்ச்சி காண, இது ஒரு பெரிய தொரு தூண்டுகோலாகவும் அமைந்தது. மூன்றாவது திட்டக் காலத்தில் 983 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டன. உயர்நிலைக் கல்விச் செலவு 1960–61-ம் ஆண்டில் 5·51 கோடி ரூபாயாக இருந்தது. ஆனால், 1966–67-ம் ஆண்டில் 13·18 கோடி ரூபாயாக உயர்ந்துவிடும். 14—17 வயதுள்ள சிறுவர்களில் மேற்கொண்டும் 80,000 பேரைச் சேர்க்கத் தேவைப்படும் நிதி வசதி அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், இட வசதி, ஆய்வுக்கூடங்கள், பள்ளிக்கூடச் சாதனங்கள் ஆகிய வசதிகளைப் பெருக்குவதற்காக முடிந்த அளவு தொகை ஒதுக்கும் அவசியத்தையும் அரசாங்கம் புறக்கணிக்கவில்லை. உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்காக 87 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். மாவட்டங்களிலே புதிதாகத் தொடங்கப்பட்ட பள்ளிகளுக்கு வேண்டிய மரச் சாமான்கள், கருவிகளுக்கென தனியே 8 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். விஞ்ஞானக் கல்வியின் பயிற்சித் தரத்தை மேலும் உயர்த்தும் வகையிலே, உயர்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக்

கூடங்களுக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கும் விஞ்ஞானக் கருவிகள் வழங்குவதற்கும் 47 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதைத் தனியே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கல்வித் திட்டங்களுக்கெல்லாம் ஆசிரியரே நடுநாயகமாக விளங்குகிறார்; எனவே, உள்ள நிதி வசதியைக் கருத்தில்கொண்டு, அவர்களின் நிலையை மேம்படுத்த, எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது. பற்பல நிர்வாகத்தின்கீழ் பணி புரியும் ஆசிரியர்களின் சம்பள வீதங்களை ஒரு நிகராக வகுத்துள்ளோம். உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியங்கள் காரணமாக ஏற்படும் செலவுப் பொறுப்புகளையும் இப்போது அரசாங்கமே முழுவதும் மேற்கொண்டுள்ளது. உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் வருங்காலச் சேமிப்பு நிதிக்குச் சேர்க்க வேண்டிய பங்குத் தொகையையும் அரசாங்கமே கொடுப்பதென அண்மையில் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கு ஓய்வுக்கால நன்மைகளாக மூவழித் திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாகக் கொண்டு வந்த பெருமை இம் மாநிலத்திற்கே உரியது. இதில், வருங்காலச் சேமிப்பு நிதி, ஆயுள் ஈட்டுறுதி ஆகிய ஏனைய நன்மைகளுடன் ஓய்வு ஊதியத் திட்டமும் அடங்கும். அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் குறைந்த அளவு ஓய்வு ஊதியத் தொகை மாதம் 20 ரூபாயாக இருக்க வேண்டும் என்று நாம் முடிவு செய்ததை ஒட்டி ஆசிரியர்களின் ஓய்வு ஊதியத்தையும் இவ்வாறே உயர்த்த வேண்டுமெனப் பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்த வேண்டுகோளை ஏற்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளதை நான் பெருமகிழ்ச்சியுடன் அறிவிக்க விரும்புகிறேன். 1966 ஏப்ரல் முதல் ஆசிரியர்களின் குறைந்த அளவு ஓய்வு ஊதியம் மாதம் 20 ரூபாயாக இருக்கும். இதன் காரணமாக, ஆண்டுக்கு 6·85 லட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும். 1966–67-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இதற்காக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

32. உயர்நிலைக் கல்வி பரவலாக்கப்பட்டதால், அதற்கேற்ப, கல்லூரிக் கல்வி வசதிகளைப் பெருக்குவதும் அவசியமாகியுள்ளது. கல்லூரிப் புகுமுக நிலையில் 45,000 மாணவர்களைச் சேர்க்கும் வசதிகளுடன் 1965–66 முடிவில், இம் மாநிலத்தில் 93 கல்லூரிகள் இருக்கும். கல்லூரிக் கல்வி வசதிகளைப் பரவலாக அமைக்கவேண்டும் என்ற நம் கொள்கைக்கேற்ப, நாட்டுப் புறங்களிலே, குறிப்பாகக் கடந்த இரண்டு ஆண்டுகளில், பல கல்லூரிகளைப் புதிதாகத் தொடங்குவதற்கு அனுமதி அளித்துள்ளோம். மேலும், ஆறு கலைக் கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கு அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்துள்ளோம். கல்வியில் பின் தங்கியுள்ள பகுதிகளிலேயே இக் கல்லூரிகள் தோற்றுவிக்கப்படும். புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கலைக் கல்லூரிகளுக்குக் கட்டிடங்கள் கட்டவும் ஏற்ற நிதி வசதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. கல்லூரிக் கல்வி.

33. ஐந்தாண்டுத் திட்டங்களில், எளியோர்க்குப் பயனுள்ளதாக அவர்கள் அக்கறை காட்டும் வேலைத் திட்டங்களில் பொதுச் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள் முக்கியமானவை என்பதில் ஐயம் ஏதும் இல்லை. கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்கு திட்டங்களைப்பற்றி நான் முன்னரே குறிப்பிட்டுள்ளேன். இவை தவிர, மூன்றாவது திட்டக் கால அளவில் நகரப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பல திட்டங்களையும் நிறைவேற்றியுள்ளோம். ஆயினும், அடுத்த ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இவ் வேலைத் திட்டங்களுக்குப் போதிய நிதி ஒதுக்கம் செய்ய முயன்றுள்ளோம். சென்னை மாநகராட்சியின் குடிநீர் வழங்கு திட்டங்களுக்காகக் கடனாகவும், மானியமாகவும் ஒரு கோடியே 70 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளதைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். ஏனைய நகரக் குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக ரூ 1,70 லட்சம் ஒதுக்கியுள்ளோம். இதில் தூத்துக்குடி துறைமுகத் திட்டம் நிறைவேறி வருவதன் விளைவாக, அப் பகுதியில் ஏற்படக்கூடிய வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு வகுக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கான 20 லட்சம் ரூபாயும் இதில் அடங்கும். அண்மைக்காலம் வரை, நாட்டைப் பீடித்து பொதுச் சுகாதாரம்—மருத்துவம்.

வந்த மலேரியா நோயை அறவே ஒழித்தது, பொதுச் சுகாதாரத் துறை, நடப்புத் திட்டக் காலத்தில் ஆற்றிய பணிகளுள் மிகவும் மகத்தான பணியாகும். மூன்ருவது திட்டக் கால அளவில் 4 கோடியே 47 லட்சம் ரூபாய் செலவாயுள்ள இத் திட்டம் இப்போது வெற்றி கரமாக முடிவுறும் நிலையில் உள்ளது. வட்டார நிலையில் ஆரம்பச் சுகாதார நிலையத்தை மையமாக வைத்தே, இத் துறையில் பெற்ற பலன்களைப் பேணிக் காக்கும் வேலைத் திட்டமொன்றை வகுக்க வேண்டு மென்பது வல்லுநர்கள் கருத்து. ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஏற்படுத்துவது மற்ற காரணங்களினுல் அவசியமாயிருப்பினும், வல்லுநர்களின் கருத்துப்படி இச் சுகாதார நிலையங்களை ஏற்படுத்துவது மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த ஆண்டு முடி விற்குள், 210 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இயங்கி வரும். மேற்கொண்டும் 120 ஆரம்பச் சுகாதார நிலையங் களை அமைக்க, அடுத்த ஆண்டுத் திட்டத்தில் 61 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். ஆரம்பச் சுகாதார நிலையங் களை ஏற்படுத்துவதில் நமக்குள்ள முக்கிய இடர்ப்பாடு நிதி வசதி அல்ல. கிராமப் பகுதிகளில் பணிபுரிய மருத்துவர்கள் போதிய எண்ணிக்கையில் முன்வராததே ஆகும். பல மருத்துவர்கள் படைப் பணிக்குச் சென்று விட்டமையால் இச் சிக்கல் மேலும் கடுமையாகி யுள்ளது. மருத்துவக் கல்லூரிகளை இன்னும் ஊக்கத் தோடு விரிவுபடுத்துவதன்மூலமே, நாட்டுப்புறங்களில் மருத்துவ வசதிகளை அதிகரிப்பதற்கு எதிராக உள்ள இடையூறுகளுக்கு நாம் நிலையான ஒரு தீர்வு காண முடியும். இவ்வகையில் 1965–66-ல் நாம் கண்டுள்ள முன்னேற்றம் சிறப்பானது. செங்கற்பட்டிலும், திருநெல்வேலியிலும் இரண்டு மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்தியதையொட்டி, நடப்பு ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 700-லிருந்து 936 ஆக உயர்ந்துள்ளது. போதிய கட்டிட வசதிகளுடனும் சாதன வசதிகளுடனும் இவ் விரு மருத்துவக் கல்லூரிகளை அபிவிருத்தி செய்வது அடுத்த ஆண்டில் நிறைவேற்ற வேண்டிய முக்கியமான வேலைத் திட்டங்களில் ஒன்ருகும். இதற்காக, 1966–67

வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 63 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். மருத்துவப் பட்ட மேற்படிப்பு நிறுவனம் (Post-Graduate Institute) ஒன்றைச் சென்னையில் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் பல காலமாகவே உணரப்பட்டு வந்தது. தற்போது நிறை வேற்றப்பட்டுவரும் மருத்துவக் கல்லூரிகளின் விரிவாக்கம் இந்த அவசியத்தை மேலும் வலியுறுத்தி யுள்ளது. பல்கலைக் கழக மானியக் கழகத்திடமிருந்து கணிசமாகப் பொருளுதவியுடன் அடிப்படை மருத்துவ விஞ்ஞானப் பட்ட மேற்படிப்பு நிறுவனம் ஒன்றை அமைக்க முன்வந்ததன் மூலம், பல்கலைக் கழகம் தனது பணியை ஏற்கெனவே தொடங்கிவிட்டது. அரசாங்கமும் இதற்கென பல்கலைக் கழகத்திற்கு 12·50 லட்சம் ரூபாய் அளவுக்கு உதவி அளித்துள்ளது. பட்ட மேற்படிப்பு நிறுவனம் ஒன்றைக் கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய் செலவில் அமைப்பதற்கேற்ற வகையில் வல்லுநர் குழு, திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இதற்கு வெளிநாட்டுச் செலாவணியும் கணிசமான அளவில் தேவைப்படும். எனவே, இதை மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்ட மாகவே நடத்தி முடிக்க வேண்டும். இத் திட்டத்திற்கு இந்திய அரசு விரைவில் ஒப்புதல் அளிக்கும் என்று நம்புகிறோம்.

34. உற்பத்திப் பெருக்கத்தை முதல் நோக்கமாகக் கொண்டு வகுக்கப்பட்டுள்ள 1966–67 ஆண்டுக்குரிய திட்டத்தில், கட்டிட வேலைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதற்கில்லை. எனினும், மருத்துவமனைகளுக்கும் மருந்தகங்களுக்கும் புதிய கட்டிடங்கள் கட்டுவதற்குப் போதிய நிதி வசதி அனுமதிக்கப்பட்டுள்ளது. பொள்ளாச்சி, சிதம்பரம், தேனி, ஆம்பூர், தாம்பரம் ஆகிய இடங்களில் புதிய மருத்துவமனைக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

35. பின்னிலை வகுப்பினரின் நலனைப்பேணி வருவதில் இம் மாநில அரசாங்கம் எப்போதுமே தனிப்பட்ட பற்றும் பரிவும் காட்டி வந்துள்ளது. ஹரிஜனங்கள், பின்னிலை வகுப்பினர் நலன்.

பின்னிலை வகுப்பினர் ஆகியவர்களின் நலனை முன்னிட்ட திட்டங்களுக்காக, 1966–67-ல் 530 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசினர் ஊக்குவிக்கும் வேலைத் திட்டங்களையும் சேர்த்து, 171 லட்சம் ரூபாய் திட்டச் செலவாகும். எஞ்சிய தொகை, திட்டத்துக்குப் புறம்பான செலவாகும். எப்போதையும் போலவே, இதில் பெரும் பகுதி கல்வி மேம்பாட்டுத் திட்டங்களுக்காகச் செலவிடப்படும். படிப்பு உதவித் தொகை கொடுக்க 148 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது. ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்ய ஒதுக்கியுள்ள தொகையும் உயர்ந் துள்ளது. இது 1966–67-ல் 44 லட்சம் ரூபாயாக இருக்கும். வேளாண்மை, கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, கிராமப் பகுதியில் குடிநீர் வழங்கல் போன்ற பல்வேறு வளர்ச்சித் துறைகளில் பொதுவான வேலைத் திட்டங்களிலிருந்து இவ் வகுப்பினர் பெறும் நன்மைகளுடன், மேலும் குறிப்பாக உதவும் வகையில் இத் தலைப்பின்கீழ் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் நினைவுகூருமாறு கனம் உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். சமுதாய அமைப்பின் எளிய நிலையிலுள்ள பின்னிலை வகுப்பினர், ஹரிஜனங்கள் முதலானோர் அப் பொதுவான வேலைத் திட்டங்களின்கீழ் அவர்களுக்குரிய நன்மைகளைப் பெறுவதிலும், இந்த அரசாங்கம் கண்ணும் கருத்துமாய் இருக்கும்.

36. இனி, இவ் வரவு-செலவுத் திட்டத்துடன் தொடர்புடைய அடிப்படைப் புள்ளி விவரங்களை ஒரு சிறிது விளக்க விரும்புகிறேன்.

37. 1964–65-ம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடுகளின்படி ரெவின்யூக் கணக்கில் துண்டு விழுந்த தொகை 4 கோடியே 76 லட்சம் ரூபாய் என்பதை மன்றம் அறியும். ஆயினும், பல்வேறு தலைப்புக் கணக்குகளில் கணிசமான அளவுக்கு நிலைமை சீர்திருந்தியதன் பயனாக, ரெவின்யூக் கணக்கில் துண்டு விழுவதற்கு மாறாக 2 கோடியே 58 லட்சம் ரூபாய் உபரி ஏற்பட்டது. சென்ற பல ஆண்டுகளாக ரெவின்யூக் கணக்கில் கணிசமாகத்

துண்டு விழுந்து வந்திருந்ததை நினைவுகூரும்போது, கடந்த ஆண்டின் இறுதிக் கணக்கு ஆறுதல் அளிப்பதாய் இருக்கிறது. மாநில வரி வருவாய் வகையில், 5 கோடியே 85 லட்சம் ரூபாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 3 கோடி ரூபாய்க்கு மேல் பொது விற்பனை வரியின்கீழும், 61 லட்சம் ரூபாய் மத்திய விற்பனை வரியின்கீழும், 33 லட்சம் ரூபாய் மோட்டார் எண்ணெய் வரியின்கீழும் வருவாய் அதிகரித்ததே இதற்குக் காரணம். விற்பனை வரி வருவாய் கூடியுள்ளதென்றால், அதற்குக் காரணம் வரி விதிப்பை முனைந்து செய்வதற்கும் வரி நிலுவைகளை விரைந்து வசூலிப்பதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மட்டுமல்ல. இவை ஒருபுறமிருக்க, வரி செலுத்துவதனின்றும் தப்பித்துக்கொள்வதைத் தடுக்க, சென்ற ஆண்டில் விற்பனை வரித் துறை மேற்கொண்ட பெரு முயற்சியும் இதற்கு முக்கியக் காரணமாகும். நமது விற்பனை வரி வருவாயில் இந்த எழுச்சிப் போக்கு (Buoyancy) நீடிக்குமென நம்புகிறோம். ஏனெனில், விற்பனை வரி வருவாயே நமது மாநில நிதித் திட்டத்துக்குப் பற்றுக்கோடாக விளங்கி வருகிறது. கேளிக்கை வரியின்கீழும் வருவாய் 15 லட்சம் ரூபாய் கூடியதெனினும், இத் தொகையில் பெரும் பகுதி தல ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்பட்டுவிடும். முத்திரைக் கட்டண வரி வகையிலும் நாம் எதிர்பார்த்ததைவிட 129 லட்சம் ரூபாய் கூடுதலாகக் கிடைத்துள்ளது. ஆயினும், நிதி ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் தல ஸ்தாபனங்களின் பங்குத் தொகையை அரசாங்க நிதிக் கணக்குகளில் சரிக்கட்டாததே ஓரளவு இதற்குக் காரணமாகும். திட்ட வேலைகளுக்கும் திட்டத்துக்குப் புறம்பான ஏனைய வேலைத் திட்டங்களுக்கும் உதவிமானியங்கள் என்ற வகையில் மத்திய அரசிடமிருந்து ஆண்டு முடிவதற்குள் நாம் எதிர்பார்த்ததைவிட, 114 லட்சம் ரூபாய் கூடுதலாகக் கிடைத்துள்ளது. வரி வருவாய் அல்லாத ஏனைய வருவாய் வகையிலும் 112 லட்சம் ரூபாய் கூடுதலாகக் கிடைத்துள்ளது. காடுகள் துறையில், 68 லட்சம் ரூபாய் கூடுதலாகக் கிடைத்தது. சிங்கோனா உட்பட, தொழில்களிலிருந்து 78 லட்சம் ரூபாய்

வருவாய் உயர்ந்துள்ளது. இத் தலைப்புகளில் இவ்வாறு வருவாய் அதிகரித்திருக்க, வட்டி போன்ற வேறு சில தலைப்புகளின்கீழ் வருவாய் குறைந்துள்ளது.

ரெவின்யூ இனச் செலவுகள்.

38. இனி, ரெவின்யூக் கணக்கில் செலவினங்களைப் பார்த்தோமானால், அபிவிருத்திச் செலவின்கீழ் 77 லட்சம் ரூபாய் செலவு அதிகரித்துள்ளது. ஆயினும், அபிவிருத்தி அல்லாத ஏனைய செலவினங்களில் ஒரு கோடியே 28 லட்சம் ரூபாய் குறைந்துவிட்டது. மூல தனச் செலவை எடுத்துக்கொண்டோமானால், பாசனம் என்பதன்கீழ் 39 லட்சம் ரூபாய் செலவு உயர்ந்துள்ளது. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள், விரைந்து நிறைவேற்றப்பட்டதையே இச் செலவு உயர்வு குறிக்கின்றது. 'தொழில் அபிவிருத்தி' என்பதன்கீழ் 63 லட்சம் ரூபாய் செலவு அதிகரித்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்களில் அரசாங்கம் அதிகப் பங்குத் தொகை போட்டதே இதற்குக் காரணம். அரசாங்க வாணிகத் திட்டங்கள் என்பதன்கீழ் நிகரமாய் 2 கோடியே 95 லட்சம் ரூபாய் மட்டுமே செலவாயிற்று. இது எதிர்பார்த்ததைக் காட்டிலும் மிகக் குறைவு. இந்திய அரசு இம் மாநில அரசாங்கத்துக்கு உரங்கள் வழங்கிய வகையில் 2 கோடியே 61 லட்சம் ரூபாய் நிதி ஆண்டுக்குள் சரிக்கட்டாததும் இதற்கு ஓரளவு காரணமாகும். உணவு தானியங்களைக் கொள்முதல் செய்து இருப்பில் வைக்க, கடந்த வரவு-செலவுத் திட்ட மதிப் பீட்டில் மிக்க முன் எச்சரிக்கையுடன் ஒதுக்கியிருந்த தொகையைவிடக் குறைந்த தொகையே செலவாயிற்று. இதுவே, மேற்கூறிய நிலைக்குப் பெரிதும் காரணமாகும். இதனால், முன்னரே நாம் திட்டமிட்டிருந்தவாறு, உணவு தானியக் கொள்முதலுக்காக, இந்திய அரசிடமிருந்து சிறப்புக் கடன் உதவி பெற வேண்டிய அவசியமும் இல்லாதுபோயிற்று. வைப்புத் தொகைகள் (Deposits) என்னும் தலைப்பின்கீழும், 2 கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைத்தது. இதனால், ஆண்டு இறுதியில் 7 கோடியே 35 லட்சம் ரூபாய் ரொக்க இருப்பு இருந்தது. வழிவகை முன்பணத் தொகையாகிய 3 கோடியே 10 லட்சம் ரூபாயைக் கழித்தாலும், இறுதி ரொக்க நிகர இருப்பு

4 கோடியே 25 லட்சமாக இருந்தது. மொத்தமாகப் பார்க்குமிடத்து, வழிவகை நிதி நிலைமை சென்ற ஆண்டில் பெரிதும் மன நிறைவு கொள்ளத்தக்க வகையில் இருந்ததென்றே சொல்ல வேண்டும்.

39. சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில், ரெவின்யூக் கணக்கில், நடப்பு ஆண்டுச் செலவு 170 கோடியே 60 லட்சம் ரூபாயாக இருக்குமென்றும், வரவு 163 கோடியே 63 லட்சம் ரூபாயாக இருக்குமென்றும் துண்டு விழும் தொகை 6 கோடியே 97 லட்சம் ரூபாயாக இருக்குமென்றும் மதிப்பிட்டிருந்தேன். அதன்பின் கடந்த ஜூனில் அரசாங்க ஊழியர்களுக்கும் தல ஸ்தாபன ஊழியர்களுக்கும், நிதி உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் மேற்கொண்டும் அகவிலைப்படி உயர்த்தியதைக் கனம் உறுப்பினர்கள் அறிவர். இது தவிர, பெரும்பாலும் வளர்ச்சிப் பணிகளுக்கான செலவு அதிகரித்துள்ளது. ஒருபுறம் செலவு இவ்வாறு உயர்ந்திருக்க, மறுபுறம், தேசீய நெருக்கடி நிலையின் காரணமாக, பயணப்படி, சில்லறைச் செலவு போன்றவகைகளிலும், கணிசமாகச் செலவினங்களைச் சுருக்கிக் கொண்டிருக்கிறோம். சில துறைகளில் அந்நியச் செலாவணித் தட்டுப்பாடு, நில ஆர்ஜித தாமதங்கள் போன்ற காரணங்களினால் முதலிற் செய்த நிதி ஒதுக்கத்தைவிட செலவு குறைவாக இருக்கலாம். கடந்த நவம்பரில் இம் மன்றம் ஏற்றுக்கொண்ட கூடுதல் வரி விதிப்பு ஏற்பாடுகளின் பயனாக, நடப்பு ஆண்டிலேயே ஓரளவு வருவாய் உயரும். இம் மாற்றங்களையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்து, திருத்த மதிப்பீடுகளின்படி, வருவாய் 164 கோடியே 91 லட்சம் ரூபாயாக இருக்குமென்றும், ரெவின்யூச் செலவு 172 கோடியே 78 லட்சம் ரூபாயாக இருக்குமென்றும், துண்டு விழும் தொகை 7 கோடியே 87 லட்சம் ரூபாயாக இருக்குமென்றும் கணக்கிட்டுள்ளேன். மாநில வரிகளிலிருந்து இப்போது 5 கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைக்குமென எதிர்பார்க்கிறோம். கூடுதல் வருவாய் பெரிதும் பொது விற்பனை வரியின் கீழும் (3 கோடியே 66 லட்சம் ரூபாய்), மத்திய விற்பனை வரியின் கீழும் (40 லட்சம் ரூபாய்), திருத்த மதிப்பீடுகள்.

மோட்டார் எண்ணெய் வரியின் கீழும் (45 லட்சம் ரூபாய்), முத்திரைக் கட்டண வரியின் கீழும் (82 லட்சம் ரூபாய்) அடங்கியுள்ளது. இவ்வாறு வருவாய் ஒரு புறம் அதிகரித்திருக்க, வேறு சில தலைப்புகளில் வருவாய் குறைந்துள்ளது. நிலவரியின்கீழ் வருவாய் 65 லட்சம் ரூபாய் குறைந்துள்ளது. கீழ் பவானி போன்ற சில திட்டப் பகுதிகளில் போதிய நீர் இன்மையால் பாசனத்துக்குத் தண்ணீர் விடாதது காரணமாகத் தண்ணீர்த் தீர்வை வசூல் குறைந்து போகும். மத்திய வரி வருவாயிலிருந்து நமக்குப் பங்காகக் கிடைக்கும் தொகையும், இவ் வரியினங்களின் போக்கையொட்டி நடப்பு ஆண்டில் 1 கோடி ரூபாய் குறைந்து விட்டது. கடந்த ஜனவரியில் நடப்பாண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை நிச்சயித்தபோது, இந்திய அரசிடமிருந்து எதிர்பார்த்ததைவிட திருத்த மதிப்பீடுகள், இப்போது இந்திய அரசு அறிவித்தபடி குறைவாயிருப்பதும் இதற்குக் காரணம்.

40. மின்சாரம் உற்பத்தியாகும் நீர்த்தேக்கங்களில் போதிய அளவு தண்ணீர் இராததால், மாநில மின்சார போர்டின் நிகர வருவாய் குறைந்துவிட்டது. இதன் விளைவாக, வட்டி வகையில் மாநில மின்சார போர்டிலிருந்து 8 கோடியே 49 லட்சம் ரூபாய் கிடைக்குமென நாம் முன்னர் மதிப்பிட்டிருக்க, நமக்கு இப்போது 5 கோடியே 91 லட்சம் ரூபாய் மட்டுமே கிடைக்கும். நடப்பு ஆண்டின் புள்ளிவிவரங்களை ஒட்டிப் பார்த்தால், திட்ட மதிப்பீட்டைவிட இப்போது அரசாங்கப் பஸ் போக்குவரத்திலிருந்து 58 லட்சம் ரூபாய் குறைவாகவே கிடைக்குமெனத் தெரிகிறது. சிறு தொழில் கார்ப்பொரேஷன் அமைக்கப்பட்டு, பல உற்பத்திப் பிரிவுகள் டிசம்பர் 1-ம் தேதி முதல் கார்ப்பொரேஷனுக்கு மாற்றப்பட்டிருப்பதன் பயனாக, 'தொழில்கள்' தலைப்பின் வரவினத் தொகையும் குறைந்தே காணப்படும்.

41. ரெவின்யூக் கணக்கில் செலவினங்களை எடுத்துக் கொண்டோமானால், அகவிலைப்படி உயர்த்தியது காரணமாக, "71. பலவகை" என்பதன்கீழ் முதற்கண்

மொத்தமாக ஒதுக்கியிருந்த தொகை, இப்போது திருத்த மதிப்பீடுகளில் அந்தந்தக் கணக்குத் தலைப்புகளின்கீழ் பங்கிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறாக, அகவிலைப்படியின் கூடுதல் செலவு அபிவிருத்தித் தலைப்புகளின்கீழும் அபிவிருத்தியின்கீழ் வராத தலைப்புகளின் கீழும் பகிர்வு செய்யப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீடுகளுக்கும் திருத்த மதிப்பீடுகளுக்கும் வேறுபாடு இருப்பதைக் காணுங்கால், கனம் உறுப்பினர்கள் இதை நினைவு கூருவார்களென நம்புகிறேன். போலீஸ் என்பதன்கீழ் செலவு 1,05 லட்சம் ரூபாய் கூடியுள்ளது. உயரிய அகவிலைப்படி கொடுத்தது, ஆயுதப் போலீஸாரின் போக்குவரத்து வசதிகளை அதிகரிக்க நாம் நடவடிக்கைகள் மேற்கொண்டது ஆகியவையே இதற்குக் காரணம். விலங்கின வளர்ப்பு (61 லட்சம் ரூபாய்), கிராம மனித சக்தித் திட்டம் (37 லட்சம் ரூபாய்), கைவினைப் பணியாளர் (Craftsmen) பயிற்சித் திட்டம் (44 லட்சம் ரூபாய்) போன்ற அபிவிருத்தி வேலைத் திட்டங்களின்கீழே செலவு அதிகரிப்பு கணிசமாக ஏற்பட்டுள்ளது. மூலதனக் கணக்கில், பாசனம் (வாணிகத் தன்மையில்லாதது) என்பதன்கீழ் 36 லட்சம் ரூபாய் செலவு உயர்ந்துள்ளதை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். சிறுபாசன சிறப்பு வேலைத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றியதே இதற்குக் காரணம். திட்டத்துக்குச் சம்பந்தப்பட்ட கட்டிடப் பணிகளில் முக்கியமாக செங்கற்பட்டிலும், திருநெல்வேலியிலும் மருத்துவக் கல்லூரிகள், மதுரையில் வேளாண்மைக் கல்லூரி ஆகியவற்றின் கட்டிட வேலைத் திட்டங்களுக்கும், மீனளம், விலங்கின வளர்ப்பு போன்ற துறைகளில் விரைவு வேலைத் திட்டத்திற்குச் சம்பந்தப்பட்ட ஏனைய சிறு திட்டங்கள் பலவற்றிற்கும் அதிகம் செலவு செய்ததே பொதுப் பணி மூலதனச் செலவு என்பதன் கீழ் 1 கோடி ரூபாய் செலவு அதிகரித்துள்ளதற்குக் காரணமாகும். அரசாங்க வாணிகத் திட்டங்களின் மூலதனச் செலவு பற்றி, பின்னர்த் தனியே குறிப்பிடுவேன். அச் செலவு நீங்கலாக, மற்ற வேலைத் திட்டங்களின் மூலதனச் செலவு திருத்த மதிப்பீடுகளின்படி 23 கோடியே 86 லட்சம் ரூபாயாக மட்டுமே இருக்கிறது.

வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இது 24 கோடியே 28 லட்சம் ரூபாயாக இருக்குமெனக் கணக்கிட்டிருந் தோம். இந்த வேறுபாடு வெளித் தோற்றத்திலேயே அன்றி உண்மையில் அல்ல. கடந்த டிசம்பரில் சிறு தொழில் கார்ப்பொரேஷனுக்கு மாற்றப்பட்ட பல்வேறு சிறு அளவுத் தொழில் பிரிவுகளின் உடைமை மதிப்பாகிய 6 கோடியே 69 லட்சம் ரூபாய், தொழில் வளர்ச்சி மூலதன முதலீடு என்பதன்கீழ் செலவுக்குச் சரிக்கட்டப்பட்டது. வரவு-செலவுத் திட்டப் பொது நடைமுறையின்படி இத் தொகை மூலதன வருவாயாகக் கருதப்பட வேண்டும். கார்ப்பொரேஷனுக்கு மாற்றப் பட்ட உடைமைகளின் மதிப்பில், பங்கு மூலதனமாகக் கருதப்பட்ட 4 கோடி ரூபாய் மட்டும் தொழில் வளர்ச்சி மூலதன முதலீடு என்பதன்கீழ் செலவாகக் கணக்கெழு தப்பட்டது. எஞ்சிய தொகை கார்ப்பொரேஷனுக்குக் கொடுக்கப்பட்ட கடனாகக் கருதப்பட்டது. இதன் விளைவாக, தொழில் வளர்ச்சி மூலதன முதலீடு என் பதன் கீழ் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 1 கோடியே 58 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்க, திருத்த மதிப்பீடுகளில் இத் தொகை —81 லட்சம் ரூபாயாகி விட்டது. மேலும், பல்வேறு நகரக் குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக ஏற்கெனவே வாங்கப்பட்ட குழாய்களை முன்னர் எதிர்பார்த்ததைவிட இப்போது அதிகம் பயன்படுத்த எண்ணியுள்ளோம். இதன் பயனாக, பொதுச் சுகாதார மேம்பாட்டுக்கான மூலதனச் செலவு திருத்த மதிப்பீட்டில் —43 லட்சம் ரூபாய் உள்ளது. வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென +15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது.

42. நகரப் பகுதிகளுக்கும் ஏனைய பற்றாக்குறைப் பகுதிகளுக்கும் உணவு தானியங்கள் சீரான முறையில் அனுப்பப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, உணவு தானியங்களைக் கொள்முதல் செய்யும் திட்டத்தை 1964 அக்டோபரில் அரசாங்கம் செயலுக்குக் கொண்டு வந்தது கனம் உறுப்பினர்களுக்குத் தெரியும். உணவு தானியக் கொள்முதல் செலவு நடப்பு ஆண்டில் மார்ச் மாதத்தில் அதன் உச்சநிலையை அடையும். அதன்பின்,

தட்டுப்பாடுள்ள மாதங்களில் இந்த இருப்பிலிருந்து உணவு தானியங்கள் படிப்படியாக எடுக்கப்படும். மற்றக் கணக்குத் தலைப்புகளில் துல்லியமாக மதிப்பிட்டுக் கூறுவதைப்போல, உணவு தானியக் கொள்முதலையும் பங்கிட்டு வழங்குதலையும் மதிப்பிட்டுக் கூறுவது எளிதல்ல. எனினும், 1966 மார்ச் இறுதியில் இருப்பிலுள்ள உணவு தானியங்களின் மதிப்பு 25 கோடி ரூபாயாக இருக்குமென எதிர்பார்க்கிறோம். சமுதாயத்தின் வாழ்விற்கு இன்றியமையாத, இப்பெரும் கொள்முதல் திட்டத்தின் காரணமாக, நடப்பு ஆண்டில் அரசாங்கத்தின் வழிவகை நிலை சிரமமாகவே இருந்து வந்துள்ளது. தேசீயக் கொள்கையைப் பின்பற்றி உணவு தானியக் கொள்முதல் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தேவைப்படுகிற நிதி வசதி, மாநில அரசாங்கத்தின் ஏனைய வளர்ச்சிப் பணிகளுக்கு இடையூறாக இருக்கக்கூடாதென்றும் இந்த நடவடிக்கைகள், தானே அடைத்துக் கொள்ளும் பான்மையுடைய வாணிகக் கடன் வசதி முறையில் நடத்தி முடிக்கப்பட வேண்டுமென்றும் நாங்கள் கருதுகிறோம். அரசாங்க வாணிகத் திட்டத்திற்குப் போதிய கடன் வசதி கிடைக்குமென்ற அடிப்படையில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை நிச்சயித்துள்ளோம். மூலதனத் தலைப்புகளில் 29 கோடியே 5 லட்சம் ரூபாய் செலவாகுமெனத் திட்ட மதிப்பீட்டில் கணக்கிட்டிருக்க, திருத்த மதிப்பீட்டில் இத் தொகை 47 கோடியே 4 லட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது. இது மாநில அரசாங்கத்தின் தானியக் கொள்முதல் திட்டத்தின் விளைவையே பெரிதும் குறிக்கின்றது.

43. 1966–67-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, ரெவின்யூக் கணக்கில் வருவாய் 188 கோடியே 72 லட்சம் ரூபாயாக இருக்குமென்றும், செலவு 188 கோடியே 41 லட்சமாக இருக்குமென்றும், அதன் விளைவாக 31 லட்சம் ரூபாய் உபரி இருக்குமென்றும் எதிர்பார்க்கிறோம். நிதிக் கமிஷன் செய்த பரிவுரைகளின் பயனாய், இம் மாநிலத்துக்குரிய வரிப் பங்கு அதிகரித்ததாலும், கடந்த நவம்பரில் இம் மன்றம் ஏற்றுக்கொண்ட

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

கூடுதல் வரிவிதிப்பின் பயனுய் வருவாய் அதிகரித்த தாலும், நடப்பு ஆண்டில் துண்டு விழுந்த பெருந் தொகை வரும் ஆண்டில் மறையுமென நம்புகிருேம். பொது விற்பனே வரி, மத்திய விற்பனே வரி, மோட்டார் வண்டி வரி போன்ற நெகழ்ச்சியுள்ள (Elastic) முக்கியமான மாநில வரிகள் அனேத் தின்கீழும் போதிய வளர்ச்சியிருக்குமென்ற அடிப் படையில், வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மின்சார வெட்டு, மூலப் பொருள் அருமை, பகுதிப் பொருள் தட்டுப்பாடு ஆகியவை காரணமாக, தொழில் உற்பத்தித் துறையில், இந் நாட்டின் பொருளாதாரம் எதிர்நோக்கியுள்ள இடர்ப்பாடுகள் விரைவில் நீக்கப்பட்டால்தான் நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு வரி வருவாய் உயரும். எனவே, மாநிலத் துறையிலும், மத்திய அரசுத் துறையிலும் ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள உற்பத்தி வேலேத் திட்டங்களே வெற்றிகரமாக நிறைவேற்றுவது மேலும் சிறப்பான முக்கியத்துவம் பெறுகிறது. செலவின வகையில், நான் முன்னரே விரிவாகக் குறிப்பிட்டுள்ள திட்ட வேலேகள் அனேத்திற்கும் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு நிதி வசதி செய்வது தவிர, பராமரிப்புச் செலவின் (Maintenance Expenditure) நியாயமான தேவைகளுக்கும் நிதி வசதி அளிக்கிறது.

44. திட்டமல்லாத செலவினங்களேயும் பராமரிப்புச் செலவினங்களேயும் நாம் மிகவும் கட்டுப்படுத்தியாக வேண்டும். அப்போதுதான் திட்டத்தை நிறைவேற்று வதற்குப் போதிய நிதி வசதி இருக்கும். ரெவின்யூக் கணக்கில் சிறு உபரித்தொகை இருந்தபோதிலும், அடுத்த ஆண்டில் நமது வழிவகை சரளமாக இருக்காது. ஏனெனில், நமது திட்டங்களுக்கு மத்திய அரசிட மிருந்து கிடைக்கும் உதவித்தொகை அடுத்த ஆண்டில் கணிசமான அளவு குறையினும், நமது வளர்ச்சிப் பணி களின் விரைவைக் குறைக்காது அதே அளவில் தொடர்ந்து நிறைவேற்ற எண்ணுகிருேம். ஆகவே, செலவினங்களேக் கட்டுப்படுத்துவதில் நாம் தொடர்ந்து கண்டிப்பாக இருக்கவேண்டும். தவிர, அண்மையில்

மத்திய அரசினரின் அகவிலைப்படி வீதங்கள் உயர்த்தப் பட்டுள்ளனவாதலின், அதேபோன்று மாநில அரசாங்க ஊழியர்களின் அகவிலைப்படியையும் உயர்த்து வதைப் பற்றிய கேள்வி எழுந்துள்ளது. இக் கேள்வியை அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது. இது பற்றி முடிவு எடுக்கும்போது நம்முடைய நிதி ஆதாரங்கள் பெரிதும் பாதிக்கப்படும். அடுத்தடுத்து அளிக்கப்பட்ட அகவிலைப்படிகளின் உயர்வு காரணமாக மூன்றும் திட்டக் காலத்தில் 25 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் செலவு ஏற்பட்டதை மன்றம் அறியும். அகவிலைப்படி உயர்வு ஒவ்வொன்றையும் அடுத்து, மேலும் விலைவாசிகளில் ஏற்றம் ஏற்படுவதால், வாழ்க்கைச் செலவில் ஏற்படும் உயர்வை ஈடு செய் வதற்கு அகவிலைப்படி உயர்வு சிறந்த வழியல்ல என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது. தவிர, தொழி லாளர்களுக்கான முக்கூட்டு நிரந்தரக் குழுவில் நான் குறிப்பிட்டது போல், அகவிலைப்படி உயர்வும், அதன் விளைவாய் நிகழும் விலையேற்றமும், அங்ஙனம் அக விலைப்படி மாற்றங்களைப் பெறாத ஏனைய குறைந்த வருவாயுடைய மக்கள் தொகுதியினருடைய இன்னல் களை மேலும் அதிகப்படுத்துகின்றன. திட்டமிட்ட பொருளாதார அமைப்பில் விலைவாசிகள் ஏற்றத்தின் இறுக்கம் தொடர்ந்து வரும். யூக வாணிகச் சக்திகளின் விளைவுகளை அகற்றி உற்பத்தித் தலங்களிலேயே இன்றியமையாப் பொருட்களைத் தாங்களே கொள்முதல் செய்து, அவற்றை நியாயமான விலைகளுக்கு வழங்கு கின்ற நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களைப் பெருமளவில் அமைப்பதன் மூலமே, இச் சிக்கலுக்கு நிலையான தீர்வு காணமுடியும். தொழிலாளர் நிரந்தரக் குழுவின் கூட்டத்தில் நான் யோசனை கூறியதுபோல், உணவு தானியங்களின் விலையேற்றத்தைத் தணிக்கும் வகையில் ஓரளவிற்காவது உதவியளிக்க வேண்டியிருக்கலாம். தனியார் துறையிலும், பொதுத் துறையிலுமுள்ள நிலையான வருவாயுள்ளோருக்காக, இப்போது செயலி

லுள்ள அகவிலைப்படித் திட்டத்திற்குப் பதிலாகத் தகுந்த வேறு ஏற்பாடுகளை அமைப்பதாகிய பிரச்சினை வல்லுநர்களின் ஆழ்ந்த ஆய்வுக்குரியதொன்றாகும்.

நான்காவது திட்டம்.

45. மன்றத்தின்கண், முன்னரே வைக்கப்பட்ட முதற் குறிப்பில் கண்டுள்ள பொது விவர அடிப்படையில் நான்காவது திட்டத்தை இறுதி செய்வதே அடுத்த ஆண்டு நாம் செய்யவேண்டிய பெரும் பணியாக இருக்கும். முதற் குறிப்பில் காட்டியுள்ள வேலைத் திட்டங்கள் அந்நியச் செலாவணி கிடைப்பதற்கேற்ப ஓரளவு மாறுபடுமென்றாலும், திட்டத்தின் அடிப் படைக் கூறுகளை உள்ளவாறே காக்க முடியுமென்றும் நாம் எண்ணியவண்ணம் திட்டத்தின் வளர்ச்சி அளவை எய்த முடியுமென்றும் நம்புகிறோம். மாநில அரசாங் கத்தின் திட்டங்களுக்கு மத்திய அரசு அளிக்கும் உதவி யின் அளவைப் பொறுத்தே அதனுடைய திட்டங் களின் உருவம் அமையும். மாநிலத் திட்டங்களுக்கு எந்த அளவில் உதவி செய்வது என்பதை ஆராயுங்கால், திட்டத்துக்கு வேண்டிய நிதி வளங்களை ஒருங்கு திரட்டுவதிலும், திரட்டிய வளங்களைப் பயனுள்ள வகையில் ஈடுபடுத்துவதிலும் தம் பங்கினை முற்றிலும் நிறைவேற்றியுள்ள நம் மாநிலம் போன்ற மாநிலங் களுக்குத் திட்டக் கமிஷன் உதவ முயலும் என்று நான் நம்புகிறேன்.

நிர்வாகச் சிக்கனம்.

46. மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவியின் அளவு எவ்வாறாயினும், நாம் மேற்கொண்டுள்ள பெருந் திட்டம் நிறைவேற வேண்டுமென்றால், அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் செலவைச் சுருக்கி, சிக்கனத்தைப் பெரிதும் கடைப் பிடிக்கவேண்டும். இந் நோக்கத்தின்படி, நிர்வாகச் செலவில் சிக்கனத்தைக் கையாள்வது தலையாய சிறப்பு வாய்ந்ததாகும். செலவு அதிகரிப்பில் பெரும் பகுதி, ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர், வேளாண்மை வளர்ச்சி அதிகாரிகள் போன்ற வளர்ச்சித் துறை அலுவலர்களைப்பற்றியதே ஆதலின், திட்டங்களின் வளர்ச்சிப் பெருக்கத்துடன் இச் செலவும் பிரிக்க முடியா

வகையில் பிணைந்துள்ளது. தவிர, சம்பள வீதங்களை மாற்றியமைத்ததும், அகவிலைப்படியை அவ்வப்போது உயர்த்தி வந்ததும் இச் செலவு உயர்வின் குறிப்பிடத் தக்க ஒரு பகுதிக்குக் காரணங்களாகும். பொதுவாகப் பார்க்கப்போனுல், கூடுதல் பணியாளர்களை நியமிப் பதில், குறிப்பாகத் திட்டத்திற்குச் சம்பந்தப்படாத பணியாளர்களை நியமிப்பதில், நாம் கண்டிப்பான கொள்கையையே பின்பற்றி வந்துள்ளோம். இவ்வாறு இருந்தும், பல்வேறு துறைகளிலும் பணியாளர்கள் அதிகரித்திருப்பதை, சிக்கனத்தை முன்னிட்டு, எல்லாக் கோணங்களிலிருந்தும் ஆய்வு செய்வது அவசியமாகிறது. இதைக் கருத்தில் கொண்டுதான், சிக்கன நிர்வாகச் சீரமைப்பு உயர் நிலைக் குழு ஒன்றை நாம் அமைத் துள்ளோம். பொதுத் துறையில் உள்ள சுயேச்சை நிறுவனங்கள் உட்பட எல்லாத் துறைகள் பற்றியும் இக் குழு ஆராயுமாதலால்; இக் குழுவின் பணி முடிவுறச் சிறிது காலமாகும். எனினும், இக் கட்டத்தில் இது பற்றி அரசாங்கத்தின் கொள்கை யாது? வேலை முறைகளை அது அணுகும் முறை யாது? என்பதைக் கனம் உறுப்பினர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். பல துறைகளில் குறிப்பாகக் கீழ்நிலைகளில், தேவைக்கு மேற்பட்ட பணியாளர்கள் குவிந்திருப்பதாகவும், இதனுல் ஏற்படும் செலவு ஒருபுறமிருக்க, தற் போதைய நிர்வாக அமைப்பு முறை, விரைந்து முடிவு எடுப்பதைத் தடை செய்யும் நிலையிலே உள்ளது என்றும் அடிக்கடி குறை கூறப்படுகிறது. நிர்வாகத்தில், அதிகாரியே வேலைப் பொறுப்பைப் பெரும்பாலும் மேற்கொள்ளும் முறையைச் செய லுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், அப்போதுதான் முடிவெடுக்கும் போக்கில் விரைவு காண முடியுமென்றும் செலவைக் குறைக்க அது வழிகோலுமென்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவ்வாருன முறையின் விளைவுகளை ஒவ்வொரு துறையின் வேலைத் தன்மையையொட்டிக் கவனமுடன் ஆய்ந்து பார்க்க வேண்டியிருப்பதால், இத் திட்டத்தை அரசாங்கத் தலைமை அலுவலகத்திலுள்ள (Secretariat) சில துறை களில் நடைமுறையில் சோதித்துப் பார்க்கலாமென

அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்தச் சோதனையின் விளைவுகளையொட்டி, இம் முறையை ஏனைய துறைகளுக்கும் நாளாவட்டத்தில் செயலுக்குக் கொண்டு வரலாம். இம் முறையைச் செயலுக்குக் கொண்டு வருவதானால், உயர்தர அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிவரும். ஆனால், இதனால் ஏற்படும் கூடுதல் செலவு அலுவலகக் கட்டுக்களில் விரைவாக முடிவெடுப்பதற்கு உதவுவதோடு கீழ்நிலைப் பணியாளர்கள் செலவில் ஏற்படும் மிச்சத்தினால் ஈடு கட்டப்படும். அரசாங்கத் துறையைத் தனியார் துறையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அரசாங்க அதிகாரிகளுக்கு, கடைநிலை ஊழியர் போன்று அலுவல்களில் நேரடியாகப் பங்குகொள்ளாத பணியாளர்கள் அதிக அளவில் இருப்பதாகக் குறை சொல்லப்படுகிறது. இவ்வாறு குறைகூறுவது பொருத்தமுடையதல்ல. ஏனெனில், அரசாங்க அலுவலகங்களில் உள்ள வேலையின் தன்மை, தனியார் அலுவலகங்களிலுள்ள வேலையின் தன்மையிலிருந்தும் பெரிதும் வேறுபடுகின்றது. இவ்வாறிருந்துங்கூட, அரசாங்க அலுவலகங்களில் கடைநிலை ஊழியர்களை வேலைக்கு அமர்த்துவதில் கடைப்பிடிக்கும் அளவுகோலை மாற்றியமைப்பதற்கு இடமிருக்கிறதென உயர் நிலைக் குழு கருதுகிறது. புதிய அளவுகோலை ஏற்கெனவே வேலையில் உள்ளவர்களைப் பாதிக்காத வகையில் நிறைவேற்றுவோம். தேவைக்கு அதிகமாயுள்ளவர்கள் பற்றிய மாவட்ட வாரியான பட்டியல் வைத்துவரப்பட்டு, சிவில் சப்ளை போன்ற வளரும் துறைகளில் உண்டாக்கப்படும் புதிய பதவிகளில் அவர்கள் அமர்த்தப்படுவார்கள். இப்போதுள்ள கடைநிலை ஊழியர்கள் புதிய அளவுகோல்படி, பரவலாக வேறு அலுவலகங்களில் ஆள் தேவைப்படும் இடத்தில் அமர்த்தப்படுவதன்மூலம், ஆண்டுதோறும் சுமார் 20 லட்சம் ரூபாய் மிச்சப்படும்.

47. அநேகமாக வளர்ச்சித் துறை ஒவ்வொன்றிலும், மொத்தச் செலவில் கணிசமான பகுதி, கட்டிடச் செலவாக உள்ளது. கல்வி, மருத்துவம், பொதுச்

சுகாதாரம் போன்ற நமது வேலைத் திட்டங்களில் கட்டிடங்கள் கட்டுதல் இன்றியமையா அங்கமாக உள்ளது. கட்டிடச் செலவை நாம் ஒரு சிறிது குறைத்தால்கூட, அதனுல் ஏற்படும் சேமிப்பு, கணிசமாயிருக்கும். அதன்பயனுக, நான்காவது திட்டத்துக்கான நிதிநிலைமையும் சீர்படும். கட்டிட அமைப்பின் வன்மையினையும் அலுவல் தேவைகளையும் ஊறுபடுத்தாமல், செலவு அதிகம் ஆகாத கட்டிட அமைப்புகளை உருவாக்குவதற்காக, தரங்களையும் விவரக் குறிப்புகளையும் இந்த நோக்கில் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியமெனக் குழு கருதி உள்ளது. மதிப்பீடுகளைத் தயாரித்தல், ஆய்ந்து பார்த்தல், ஒப்புதல் அளித்தல் ஆகியவற்றில் இப்போதுள்ள நடைமுறைகளைச் செம்மைப்படுத்துவதும் அவசியமாகும். ஒப்பந்தங்கள் அளிக்கும் முறையையும் செய்த வேலைக்குத் தொகை அளிக்கும் முறையையும் எளிதாக்கினுல், ஒப்பந்தக்காரர்கள் குறிப்பிடும் ஒப்பந்த அறிவிப்பு வீதங்களைக் குறைக்க முடியுமென்ற கருத்து அடிக்கடி கூறப்படுகிறது. கட்டிடம் கட்டுவதில் சிக்கனம் பற்றிய முக்கியமான இக் கூறுகளையெல்லாம் அரசாங்கத்தின் உயர்தரப் பொறியாளர்களும், தனிப்பட்ட வல்லுநர் சிலரும் அடங்கிய தனிப்பட்ட துணைக் குழு ஒன்று ஆராய வேண்டுமென உயர் நிலைக்குழு கருதுகிறது.

48. இம் மன்றம் அக்கறை காட்டக்கூடிய குறிப்பிடத்தக்க சில முடிவுகளையும் இக் குழு ஏற்கெனவே செய்துள்ளது. வேளாண்மை வருமான வரியிலிருந்து நமக்குக் கிடைக்கும் மொத்த வருவாயாகிய சுமார் 1,40 லட்சம் ரூபாயில் மலைத் தோட்டம் நீங்கலாக வேளாண்மை வருமானம் மூலம் கிடைக்கும் தொகை சுமார் 50 லட்சம் ரூபாயாக உள்ளது என்பதைக் கனம் உறுப்பினர்கள் அறிவார்கள். இத் துறையின் நிர்வாகத்திற்காக ஆகும் மொத்தச் செலவு 15 லட்சம் ரூபாய். இதில் மலைத் தோட்டமல்லாத ஏனைய வருமானத்தைக் கவனித்துக்கொள்ளும் பணியாளர்களுக்குச் சற்றேறக்குறைய 12 லட்சம் ரூபாய் செலவாகிறது. மலைத் தோட்டக்காரர்கள் அல்லாத நில உடைமையாளர்களிட

மிருந்து கிடைக்கும் வேளாண்மை வருமான வரி, கணிசமாக இல்லை. நில உடைமை அளவு, சிறியதாக இருப்பதும், குடியானவர்கள் சிறிதும் துன்பத்துக்கு உள்ளாகக் கூடாது என்னும் நோக்கத்தோடு ஒருபடித்தான வீதங்களில் உடன்பட்டு வரி செலுத்தும் திட்டத்தை (Composition) நாம் ஏற்படுத்தியுள்ளதும் இதற்குக் காரணங்களாகும். உடன்பட்டு வரி செலுத்தல் பற்றிய ஆணைகள் ஒரு முறை பிறப்பிக்கப்பட்டால், சில குறிப்பிட்ட காரணங்களுக்கன்றி பொதுவாக மூன்றுண்டுக் காலம் அவை நிலைத்திருக்க வேண்டுமென்றும், வேண்டுமெனில், உடன்பட்டு வரி செலுத்துவதற்கு மாருக, விவரக் கணக்கு அனுப்ப விருப்ப உரிமை (Option) கொடுக்கப்படவேண்டும் என்றும் அரசாங்கம் இப்போது முடிவு செய்துள்ளது. இந்த முக்கிய மாறுதல்கள் காரணமாக, தோட்டமல்லாத ஏனைய வேளாண்மை வருமானம் குறித்த வேளாண்மை வருமான வரி அதிகாரிகளின் வேலைப்பளு பெரிதும் குறைந்துவிடும். எனவே, மலைத் தோட்டங்கள் நீங்கலாகவுள்ள பகுதிகளில் வேளாண்மை வருமான வரிகளைப் பார்ப்பதற்காகவென்று தனித்த அதிகாரிகள் தேவையில்லையென்றும், பெரும்பாலும் இவ்வேலையை நிலவரிப் பணியாளர்களே கண்காணித்துக்கொள்ளலாமென்றும் அரசாங்கம் கருதுகிறது. இந்த முடிவு முழு அளவில் நிறைவேற்றப்படும்போது, 10 லட்சம் ரூபாய் வரையில் மிச்சப்படும்.

49. எடைகள்—அளவைகளுக்கென்று தனிப்பட்ட எடைகள்—அளவைகள் துறை ஒன்று இயங்க வேண்டிய அவசியமில்லையென்றும், பற்பல கடைக்காரர்கள் வைத்துள்ள எடைகளையும் அளவைகளையும் சரிபார்ப்பதே இத் துறையின் முக்கிய பணியாதலால், கடைகளையும் நிறுவனங்களையும் சோதித்துப் பார்ப்பதையே தங்கள் அலுவலாகக் கொண்ட தொழிலாளர் துறை இன்ஸ்பெக்டர்களே இவ் வேலையையும் மேற்பார்த்துக்கொள்ளலாமென்றும் குழு கருதுகிறது. இவ் வேலை மாற்றத்தால் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதுபற்றி விரிவாக ஆராயப்

பட்டு வருகிறது. எடைகள்—அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, இப்போது செய்துவரும் வேலைகளைத் தொழிலாளர் துறைக் கமிஷனரே மேற்கொள்ள முடியும். இதற்காக, இவரது தலைமை அலுவலகத்தில் கூடுதலாகப் பணியாளர்கள் சிலரையும், இன்ஸ்பெக்டர்கள் சிலரையும் நியமிக்க வேண்டிவரும். தொழிலாளர் துறை இன்ஸ்பெக்டர்களுக்கு வேண்டிய எடைகளையும் அளவைகளையும் புதிதாக வாங்க வேண்டியிருக்குமாதலால், மூலதனச் செலவும் ஓரளவு அதிகரிக்கக் கூடும். ''தொழிலாளர் துறை'', ''எடைகள்-அளவைகள் துறை'' ஆகிய இரண்டு துறைகளிலும் ஆகும் பணியாளர் செலவை ஒன்ருகக் கணக்கிட்டுப் பார்க்கும் போது, இவ்வேற்பாட்டினுல் ஆண்டு ஒன்றுக்கு 4 லட்சம் ரூபாய் மிச்சப்படலாம். நிர்வாகத்தின் ஏனைய பிரிவுகளிலும் இவ்வகையில் சிக்கனம் செய்வதன் சாத்தியக் கூறுகளை இக் குழு விரிவாக ஆராய்ந்து நிர்வாகச் செலவில் 1 கோடி ரூபாய் அளவிற்கு, சேமிப்பைக் காண முயற்சி செய்யும். நிர்வாகத்தில் சிக்கனம் செய்ய, கனம் உறுப்பினர்கள் உருவான கருத்துக்களைத் தெரிவிப்பார்களாஞல், அவற்றை நான் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்பேன்.

50. சிக்கனம் என்பது செலவுச் சுருக்கம் மட்டும் அல்ல. செலவிடும் பணத்திற்குச் சிறந்த பயன் காணும் வகையில் ஆட்களையும் பொருள்களையும் திறமையுடனும், சீராகவும் ஈடுபடுத்தும் அமைப்பின் ஒரு பகுதியே சிக்கனம். எனவே, துறைகளைச் சீரமைப்பதும் இக் குழுவின் முக்கியமான பணிகளுள் ஒன்ருகும். முதற்கண், இக் குழு மருத்துவ, பொதுச் சுகாதாரத் துறைகளின் அமைப்பை ஆராய்ந்தது. இதுபற்றிப் பல வல்லுநர் குழுக்கள் முன்னரே கருத்துத் தெரிவித்துள்ளவாறு, இவ்விரு துறைகளையும் ஒன்ருக இணைக்கும் வேலையை மேற்கொண்டு முடிக்க வேண்டுமெனக் குழு கருதுகிறது. இந்த இரு துறைகளும் ஒன்ருக இணைக்கப்பட்டால்தான், ஆரம்பச் சுகாதார நிலையத்தை மையமாகக் கொண்டு, கிராமப் பகுதியில் நோய் நீக்கும் பணிகளையும், நோய் தடுப்புப் பணிகளையும் செம்மையாக நிறைவேற்ற

துறைகளின் சீரமைப்பு.

முடியும் என்ற எண்ணமே குழு இம் முடிவுக்கு வரப் பெரிதும் தூண்டுகோலாயிருந்தது. நாம் மிகவும் முக்கியத்துவம் அளிக்கிற குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் வெற்றியடைய வேண்டுமானால், இரு துறையினரும் ஒன்றாய்ச் செயலாற்ற வேண்டும். மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை மிக அதிகமாகிவிட்டதால்; மருத்துவக் கல்வி நெறியாளர் அலுவலகம் ஒன்றைத் தனியே அமைக்க வேண்டுமெனப் பல்கலைக் கழகம் பல சமயங்களில் கருத்துத் தெரிவித்துள்ளது. மருத்துவக் கல்வியைக் கவனித்துக்கொள்ள நாம் ஏற்கெனவே மருத்துவப் பணிக் கூட்டு நெறியாளர் பதவி ஒன்றை ஏற்படுத்தியுள்ளோம். மருத்துவக் கல்வி, அத்துடன் தொடர்புடைய ஏனைய செயல்கள் அனைத்தையும் இவர் பெரும்பாலும் தாமாகவே கவனித்து வருகிறார். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, மருத்துவ; பொதுச் சுகாதாரத் துறைகள் இணையும் அதே நேரத்தில், மருத்துவக் கல்லூரிகளும் அவற்றுடன் இணைந்துள்ள கல்வி கற்பிக்கும் மருத்துவ மனைகளும் தனியே பிரிக்கப் பட்டு, மருத்துவக் கல்வி நெறியாளரின் தனிப்பொறுப் பின்கீழ் வைக்கப்பட வேண்டுமெனக் குழு கருதுகிறது. இவ்வகையில், மருத்துவ, பொதுச் சுகாதாரத் துறைகளை இணைப்பது பற்றிய விவரங்கள் உருப்பெற்று வருகின்றன.

முடிவுரை.

51. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நம்முன் உள்ள பெரும்பணிகளைச் செவ்வனே ஆற்றுவதற்காக நம்மை நாம் சித்தம் செய்து கொண்டிருக்கும் இச் சீரிய வேளையில், சிக்கனம்-திறமை என்ற இவை இரண்டுமே மந்திரச் சொற்களாக நம்மை வழிநடத்திச் செல்ல வேண்டும். வளர்ச்சிப் பணிகளை முன்னிலும் விரைவாக நிறைவேற்றுவதே நம்மை எதிர்நோக்கி யுள்ள இடர்ப்பாடுகளைத் தீர்க்கும் பெரு நெறியாகும். எனவே, வளர்ச்சிப் பாதையில் பின்னோக்கிச் செல்லும் பேச்சுக்கே இடமில்லை. அண்மையில், நம் நாட்டின்மீது வந்த புறப் பகையை வெல்வதில், நம் மக்கள் தாங்களாகவே காட்டிய ஒற்றுமை உணர்வையும், திண்ணிய உறுதியையும் நாம் மீண்டும் கிளர்ந்தெழச் செய்யின்,

நம் முன்னே நிற்கும் இடையூறுகளை வெல்வதும், பொருளாதாரத் தன்னிறைவு காண்பதும் நமக்கு அரிதல்ல. அவ்வாறான திண்மையும், வன்மையும் நிலவ வேண்டிய சூழ்நிலையை உருவாக்கும் வகையிலே திட்ட மதிப்பீடுகளின் மீது கனம் உறுப்பினர்கள் ஆற்றும் விவாதங்கள் அமைந்திருக்கும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை என்று கூறி, இந் நிதிநிலை அறிக்கையை ஏற்குமாறு மன்றத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்னை,
26 பிப்ரவரி, 1966.

எம். பக்தவத்சலம்,
முதல் அமைச்சர்.